# முன்பள்ளி கல்வி தொடர்பான தேசிய கொள்கை

தேசிய கல்வி ஆணைக்குழு
இலங்கை
2019

# முன்பள்ளிக் கல்வி பற்றிய தேசிய கொள்கை

தேசிய கல்வி ஆணைக்குழு
இலங்கை
2019

# முன்பள்ளிக் கல்வி பற்றிய
## தேசிய கொள்கை

செப்டெம்பர் 2019


எழுத்தாளர் : தேசிய கல்வி ஆணைக்குழு,
126, நாவல வீதி, நுகேகொட,
இலங்கை

தொலைபேசி : +94 11 281 5703
தொலைநகல் : +94 11 281 6178
மின்னஞ்சல் : secnec@slt.lk
இணையத்தளம் : www.nec.gov.lk



ISBN : 978-955-9448-53-2
Bar Code :

# உள்ளடக்கம்

முன்னுரை v

நன்றியுரை vi

1991ம் ஆண்டின் 19வது தேசிய கல்வி ஆணைக்குழுச் சடட்த்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகள் vii

முகவுரை xi

சுருக்கப்பதங்கள் xii

1. அறிமுகம் 1
    - 1.1 தேசிய சூழமைவில் முன்பள்ளிக் கல்விக் கொள்கை 3
    - 1.2 இலங்கையில் முன்பள்ளிக் கல்வியில் காணப்படுகின்ற சமகால பிரச்சினைகள் 4
2. முன்பள்ளிக் கல்வி பற்றிய தேசியக் கொள்கை 9
    - 2.1 தேசியக் கொள்கையின் நோக்கமும் வழிகாட்டல் கோட்பாடுகளும் 9
    - 2.2 தொலைநோக்கும் பணிக்கூற்றும் 12
    - 2.3 விசேட குறிக்கோள்கள் 13
3. நடவடிக்கைக்கான பகுதிகள் 14
    - 3.1 முன்பள்ளிக் கல்வியில் நியாயமான வாய்ப்பு 15
    - 3.2 முன்பள்ளிக் கல்வியில் தரம் 16
    - 3.3 முன்பள்ளிக் கல்விப் பணியாளர்களின் விருத்தி 17
    - 3.4 பெற்றோர், குடும்பம் மற்றும் சமூதாயப் பங்கேற்றல் 18
    - 3.5 தரவுகள், ஆராய்ச்சி, மதிப்பீடு மற்றும் ஆவணப்படுத்தல் 19
    - 3.6 முன்பள்ளிக் கல்வியின் ஆளுகையும் நிதியிடலும் 20
4. கொள்கை அமுல்படுத்தல் சட்டகம் 23

பின்னிணைப்பு 25

பின்னிணைப்பு 1: பதங்கள் மற்றும் வரைவிலக்கணங்களின் அருஞ்சொற்பட்டியல் 25

பின்னிணைப்பு 2. தேசிய முன்பள்ளிக் கல்விக்கொள்கை வரைவாளர் குழு 27

பின்னிணைப்பு 3. தேசிய கல்வி ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் 29

பின்னிணைப்பு 4. தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொதுக் கல்வி தொடர்பான நிலையியற் குழு அங்கத்தவர்கள் 29

# முன்னுரை

தற்பொழுது இலங்கையில் முன்பள்ளி தொடர்பான கல்விக் கொள்கை இல்லாமையால் ஒரு பொருள் தரும் பெயரில் வெவ்வேறு வகையான முன்பள்ளிகளையே காணக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக, குழவிப் பூங்கா, முன்பள்ளி, நேர்சரி, சிறுபிள்ளை விருத்தி நிலையம் மற்றும் மொன்டோசோரி ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. போதனா மொழியும் அதே போல தரங்களும் நிறுவனத்திற்கு நிறுவனம் வேறுபடுகின்றன.

இவ்வாறான சூழமைவில் தேசிய கல்வி ஆணைக்குழுவால் உருவாக்கப்பட்ட முன்பள்ளிக் கல்வி தொடர்பான கொள்கை மிகவும் அவசியமாகவுள்ளது. இவ் ஆணைக்குழுவானது 1991ம் ஆண்டு 19ம் இலக்கச் சட்டத்தின் கீழ் கல்வியின் அனைத்து அம்சங்களிலும் அதற்கான கொள்கையினை உருவாக்குவதனை முதன்மைப் பொறுப்பாகக் கொண்டுள்ளது.

இக் கொள்கை ஆவணமானது பயனாளிகள் சகலரதும் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்டு இதனைப் பிரசுரிப்பதற்கு முன்னர் பொதுக்கல்விக்கான நிலையியற் குழுவினராலும் தேசிய கல்வி ஆணைக்குழுவினாலும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி ஜி. பி. குணவர்த்தன, துணைத் தலைவரின் (கொள்கை) வழிகாட்டலின் கீழ் இந்த ஆவணத்தினைத் தயாரித்த குழுவினருக்கு மிகுந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் டபிள்யு. ஐ. சிறிவீர
தலைவர்
தேசிய கல்வி ஆணைக்குழு
17-09-2019.

# நன்றியுரை

இலங்கையிலே முன்பள்ளிக் கல்வியானது கல்வி கொள்கையோடு இணைந்த வழிகாட்டலின்றி இடம்பெற்று வந்துள்ளது. இக் கல்விக்கொள்கையானது இலங்கையின் முன்பள்ளிக் கல்வியில் ஈடுபாடுடைய பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுடன் இடம்பெற்ற ஆலோசனை மற்றும் சமகால ஆராய்ச்சிகளின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிக் கல்வியானது ஆரம்பப் பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் விருத்திக்கான சூழமைவில் இடம்பெறுவதன் காரணமாக தேசிய கல்வி ஆணைக்குழுவானது சிறுவர் செயலகம் மற்றும் சகல மாகாணங்களிலும் ஆரம்பக் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள பணிப்பாளர்களுடனும் மிக நெருக்கமாக இணைந்து செயற்பட்டுள்ளது.

இக்கொள்கை உருவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் பிரத்தியேகமாக தவிசாளர். உதவி தவிசாளர் (திட்டமிடல்) ஆணைக்குழுவின் சபை அங்கத்தவர்கள் பொதுக்கல்வி நிரந்தர சபை உறுப்பினர்கள், தேசிய கல்வி ஆணைக்குழுவினது ஊழியர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

மேலும், சிறந்த ஆலோசகர்களான பேராசிரியர் எல். சி கொத்தலாவல மற்றும் கலாநிதி இந்திராணி தலகல மற்றும் திட்டத்தின் ஒரு பகுதிக்கான நிதியளித்து ஆதரவு வழங்கிய UNICEF க்கும் எனது வாழ்த்தினை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

கலாநிதி ஜீ. பி குணவர்தன
துணை தலைவர்
தேசிய கல்வி ஆணைக்குழு

# 1991ம் ஆண்டின் 19வது தேசிய கல்வி ஆணைக்குழுச் சடட்த்திலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகள்

தேசிய கல்வி ஆணைக்குழுவும் அதன் செயற்பாடுகளும்

(1) ஆணைக்குழுவின் செயற்பாடுகளாவன:

(அ) கல்விக் கொள்கையில் தொடர்ச்சியை உறுதிப்படுத்துமாறும் சமுதாயத்தின் மாறுந் தேவைகளுக்கு கல்வி முறைமை பதிலளிக்கக் கூடியதாக இருக்குமாறும் இயலுமாக்குமாறும், கல்விக் கொள்கையும் கல்விக் கொள்கையின் உடனடி திட்டமும் அல்லது திட்டங்களும் முழுமையான தேசிய கல்விக் கொள்கை மீதான பரிந்துரைகளை ஜனாதிபதிக்குப் வழங்குதலும் உட்படக் கல்விக் கொள்கையின் அனைத்து அம்சங்களும் பற்றி ஜனாதிபதிக்குப் பரிந்துரைகளை வழங்குதல்;

(ஆ) நடைமுறையிலுள்ள தேசிய கல்விக் கொள்கையையும் திட்டம் அல்லது திட்டங்களையும் கால ஒழுங்கில் மீளாய்வு செய்தலும் ஆராய்தலும் தேவையான போது அத்தகைய கொள்கையிலோ திட்டம் அல்லது திட்டங்களிலோ மாற்றத்தை ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்தல்;

(இ) ஆணைக்குழுவிடம் ஜனாதிபதி ஆலோசனைக்காகப் பாரப்படுத்திய கல்வி சார்ந்த வேறெந்த விடயம் பற்றியும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கல்.

(2) துணைப்பிரிவு (1) இன் கீழ் ஆணைக்குழு பரிந்துரைகளை வழங்கக்கூடிய விடயங்களின் பொதுமைக்குக் குந்தகமின்றிக், கீழ்க் கூறியுள்ள விடயங்கள் பற்றி ஆணைக்குழு ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்கலாம்:

(அ) வேலைவாய்ப்புக்கும் தொழிற்துறைக்கும் சமூகத் தேவைகளுக்கும் கல்வியைப் பொருத்துமாறு கல்வி நிறுவனங்களின் கலைத்திட்டத்திலும் கற்பித்தல் முறைகளிலும் தேவையான மாற்றங்கள்;

(ஆ) மாணவர்களுக்குக் கல்வி நிறுவனங்கள் வழங்கும் வழிகாட்டலும் ஆலோசனையும் அவர்கள் தமது ஆற்றலை முழுமையாக விருத்திசெய்தற்குக் போதுமாயிருத்தல்;

(இ) கல்வி நிறுவனங்களுக்கும் சமூகத்துக்குமிடையான இணைப்புகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள்;

(ஈ) சமூகத்தில் முழுமையான மனித விருத்திக்கான வள மையங்களாகக் கல்வி நிறுவனங்களை விருத்தி செய்தல்;

(உ) பாடசாலைகளிடையே பிரதேச-அடிப்படை ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தற்கான அவசிய நடவடிக்கைகள்;

(ஊ) ஆசிரியர்களதும் பிற கல்விச் சேவை ஊழியர்களதும் தொழில்வாண்மை மதிப்பை மேம்படுத்தற்கான அவசிய நடவடிக்கைகள்;

(எ) ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளைக் காலம் முந்தி நீங்கும் சிறார் தமது ஆற்றலை முழுமையாக விருத்திசெய்ய இயலுமாக்கச் சிறாரின் பயன் கருதி வழங்கக்கூடிய மாற்று நிகழ்ச்சித்திட்டங்கள்;

(ஏ) எல்லாச் சமூகங்களையும் எல்லா மதங்களையும் சேர்ந்த மாணவர்களின் கலாசாரம் மற்றும், மத அபிலாசைகளைப் பேணுவதற்கு அவசியமான கலைத்திட்ட மாற்றங்கள்;

(ஐ) இத்தகைய பரிந்துரைகளில் எதாயினும் தாக்கத்தை ஏற்புடுத்துவதற்குத் தேவையான சட்ட ரீதியான மாற்றங்கள்.

தேசிய கல்விக் கொள்கையில் உள்ளடங்குவன:

கல்வியின் இலக்குகளும் குறிக்கோள்களும்; ஆரம்ப, இடநிலை, மூன்றாம் நிலை, உயர், முறையில், முறைசார்பற்ற, வளர்ந்தோர், சிறப்பு, தொழில்சார், மதஞ்சார் அமைப்புகள், அமைவிடமும் பரம்பலும்; மாணவர் அனுமதிக்கும் ஆசிரியர் ஆட்சேர்ப்புக்குமான தேர்வு-விதிகள்; போதனா மொழியும் கலைத்திட்டங்களின் பல்வகைப்படுத்தலும் பாடநூல்களும் கற்றற் சாதனங்களும் சமய அறிவினதும் அவதானத்தினதும் நடைமுறையினதும் இடமும், கணிப்பீடும் மதிப்பாய்வும், பரீட்சை முறையும், சான்றிதழ்களும் டிப்ளோமாக்களும் கல்விசார் பரிசில்களும் தகுதிகளின் அங்கீகாரமும் உட்பட்ட கல்வியின் உள்ளடக்கம்; ஆசிரியர்களும் உரிமமற்ற கல்விச்சேவை ஊழியர்களும் மேற்பார்வையாளர்களும் நிருவாகிகளும் உட்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் ஆட்சேர்ப்பும் பணியமர்த்தலும், ஒழுங்குசார் கட்டுப்பாடும் தொழில்வாண்மை விருத்தியும்; சமூகப் பங்குபற்றலைத் திரட்டல் உட்பட்ட கல்விக்கான வளங்களும்; துணைச் சேவைகளும் உடற்பயிற்சிக் கல்வியும் விளையாட்டும்.

ஆணைக்குழு பின்வருவோரைக் கொண்டிருக்கும்:

(அ) 1978ம் ஆண்டின் பல்கலைக் கழகங்கள் சட்டம் 16இன் கீழ் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர்:

(ஆ) 1990ம் ஆண்டின் மூன்றாம்நிலை மற்றும் தொழில்சார் கல்விச் சட்டம் 20இன் கீழ் உருவாக்கப்பட்ட மூன்றாம்நிலை, தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் தலைவர்:

(இ) கல்வியும் உயர் கல்வியும் என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பெயரில் ஜனாதிபதி நியமித்த ஓர் உறுப்பினர்:

(ஈ) நிதி என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பெயரில் ஜனாதிபதி நியமித்த ஓர் உறுப்பினர்:

(உ) மாகாண சபைகள் என்ற விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பெயரில் ஜனாதிபதி நியமித்த ஓர் உறுப்பினர்:

(ஊ) கல்வி, நிருவாகம், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஒன்றில் ஆற்றலைப் வெளிப்படுத்தி அல்லது உயர் தொழிலில் சிறப்பெய்தியோரிடையே இருந்து ஜனாதிபதி நியமித்த மேலும் பத்து உறுப்பினர்கள். பிரிவு 5இன் கீழ் நியமிக்கப்பட்ட தலைவர், உப தலைவர் (கொள்கை), உபதலைவர் (திட்டமிடல்) ஆகியோர் ஆணைக்குழுவிற்காக முழுநேரப் பணியாற்றுவர்.

# முகவுரை

முன்பள்ளிக் கல்வி தொடர்பான தேசிய கொள்கை இலங்கையின் முன்பள்ளித் துறைக்கு நீண்டகாலத் தொலைநோக்கினை உருவாக்குகின்றது; பரந்த சமூக மாற்றத்தினுள் துறைக்கான சீர்திருத்தங்கள் மற்றும் அபிவிருத்திகளை கவனத்திற்கொள்கின்றது; நாட்டில் முன்பள்ளிக் கல்வி தொடர்பான அரும்பதங்கள், அளவீடுகள் மற்றும் கூறுகளை தெளிவுபடுத்துகின்றது; வாய்ப்புகளை (access) மேம்படுத்தவும், தரத்தினை முன்னேற்றவும், பெற்றோர் மற்றும் குடும்பங்களை ஈடுபடுத்தவும் நடவடிக்கைகளுடன்கூடிய சட்டகமொன்றை வழங்குகின்றது; தரவுகளால் வழிப்படுத்தப்படுவதுடன் நிதிகளையும் பணியாளர்களையும் நிருவகிக்கின்றது; மேலும், முன்பள்ளிக் கல்வி வயதிலுள்ள சகல பிள்ளைகளும் தமது முழுமையான ஆளுமையை விருத்தி செய்துகொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு தேசிய, உப தேசிய மட்டங்களில் தலைமைத்துவம், ஆளுகை, ஒருங்கிணைப்பு கட்டமைப்புக்களை உறுதிப்படுத்துவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

# சுருக்கப்பதங்கள்

| | | |
|---|---|---|
| CRC | – | சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் |
| DAP | – | விருத்திக்குப் பொருத்தமான நடைமுறைகள் |
| ECCD | – | முன்பிள்ளைப் பருவப் பாரமரிப்பும் விருத்தியும் |
| ECDS | – | முன்பிள்ளைப் பருவ விருத்தித் தரநியமங்கள் |
| ECE | – | முன்பிள்ளைப் பருவக் கல்வி |
| EFA | – | சகலருக்கும் கல்வி |
| ELAC | – | ஆரம்பநிலைக் கற்றல் ஆலோசனை குழு |
| EMIS | – | கல்வி முகாமைத்துவத் தகவல் முறைமை |
| NAEYC | – | இளவயதுப் பிள்ளைகளின் கல்விக்கான தேசிய அமைப்பு |
| NCC | – | தேசிய இணைப்புக் குழு |
| NEC | – | தேசிய கல்வி ஆணைக்குழு |
| NGO | – | அரச சார்பற்ற அமைப்புக்கள் |
| SDG | – | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் |
| UNESCO | – | ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாச்சார அமைப்பு |
| UNICEF | – | ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் |

# 1. அறிமுகம்

1

அறிமுகம்

பிள்ளையின் வாழ்க்கையில் ஆரம்ப வருடங்களே வாழ்நாள் நீடித்த வெற்றிக்கான அத்திவாரமாகும். பிள்ளையின் கற்றலுக்கும் செழிப்பான வளர்ச்சிக்கும் நல்லாரோக்கியம் மற்றும் சிறந்த போசாக்குடன் ஆரம்ப கற்றலுக்கு பாதுகாப்பான, இடரற்ற, துலங்கல்மிகு வீட்டுச்சூழலும் வாய்ப்புக்களும் அவசியமாகின்றன. மேலும், உயர் தரத்திலமைந்த முன்பிள்ளைப் பருவ நிகழ்ச்சித்திட்டங்கள் இளம் பிள்ளைகளின் வாழ்வை மாற்றும் நிகழ்ச்சித்திட்டங்களாக இருக்குமென்பதுடன், அவற்றினால் பிள்ளைகளுக்குச் சிறந்த சுகாதாரம் மற்றும் கல்வி பெறுபேறுகளின் பயன்களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவை குற்றங்களை குறைத்து, வயது வந்ததும் உயர் தனியாள் வருமானங்களை உழைப்பதற்கு வழிவகுக்குமென்பதில் முன்னணிப் பொருளியலாளர்கள் உடன்படுகின்றனர், முன்பிள்ளைப்பருவப் பாராமரிப்பு மற்றும் விருத்தி மீதான இலங்கையின் தேசிய கொள்கையின் வரைவிலக்கணத்தின் படி முன்பிள்ளைப்பருவம் என்பது கருத்தரித்த காலம் முதல் ஐந்து வயது வரையான காலமாகும்.[1]

இக்காலத்தில் பிள்ளையின் மூளை வளர்ச்சியில் பிள்ளை வளரும் சுற்றுச்சூழல் மாத்திரமன்றி சூழவுள்ள மக்களும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். எனவே, பிள்ளைகளுக்கு அவர்களின் ஆரம்ப வாழ்வில் இருக்கின்ற அனுபவங்களின் தரமானது அவர்களின் மூளை கட்டமைப்பு விருத்தியுடன் தொடர்புபடுவதனால், பிள்ளைகளுக்குத் தம்மீது அக்கறை செலுத்துகின்ற பெற்றோர், பராமரிப்பாளர்கள் மற்றும் வளர்ச்சியடையும் போது முன்பள்ளியில் முன்பள்ளி ஆசிரியர்கள் என்போரின் தொடர்புகளால் பெறுகின்ற பொருத்தமான, வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஆரம்ப அனுபவங்கள் முக்கியமானவை.

குறைந்தபட்சம் ஒரு வருடமாவது முன்பள்ளிக் கல்வியில் அல்லது முன்பிள்ளைப்பருவக் கல்வியில் சேர்ந்த பிள்ளைகள் பாடசாலையில் வெற்றியடைவதற்கான திறன்களை விருத்தி செய்துகொள்ளவதுடன், மீண்டும் ஒரே தரத்தில் கற்றல் மீட்டுவதற்கோ அல்லது பாடசாலையிலிருந்து இடைவிலகுதல் மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால் வயது வந்ததும் சமாதான மற்றும் சுபீட்சமான சமூகங்களுக்கும் பொருளாதாரங்களுக்கும் தமது பங்களிப்புக்களை வழங்குவதற்கு அவர்கள் ஆயத்த நிலையில் இருப்பார்களென ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.[2] மேலும், கிடைக்கக்கூடிய தரவுகளின்படி உயர் தரம் வாய்ந்த முன்பிள்ளைப்பருவ சேவைகளில் மேற்கொள்ளப்படுகின்ற முதலீடுகள் காலப்போக்கில் ஈடுசெய்யும் சேவைகளுக்கான செலவுகளை சேமிக்கும்.[3] எனவே, இளம் பிள்ளைகளில் மேற்கொள்ளும் முதலீடானது சிக்கனத்துக்கும் பிள்ளைக்கு சாதகமான நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பு செய்யும் காரணியாக அமையும். சகலருக்கும் முன்பள்ளிக் கல்வியை வழங்குவதே சகல பிள்ளைகளுக்குச் சமமான வாய்ப்புக்களை வழங்குவதற்கான அடிப்படையென கருதப்படுகின்றது.

---

1 *Sri Lanka, Ministry of Women and Child Affairs and Dry Zone Development, National Early Childhood Care and Development Policy (Colombo, 2019).*

2 *United Nations Children's Fund, A World Ready to Learn: Prioritizing quality early childhood education (New York, UNICEF, 2019).*

3 *Jorge Luis García, James J. Heckman, Duncan Ermini Leaf and María José Prados, "Quantifying the Life-Cycle Benefits of a Prototypical Early Childhood Program", NBER Working Paper No. w23479 (Cambridge, Massachusetts, National Bureau of Economic Affairs, 2017).*

எனவே, பல்-தேசிய அமைப்புக்கள் முக்கியமான வழிகாட்டல்கள் ஆவணங்களை விருத்திசெய்து உலகம் முழுவதுமுள்ள முன்பிள்ளைப் பருவக்கல்வியின் மேம்பாட்டுக்கு உதவுவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்கின்றன.[4] அந்தவகையில், இலங்கையும் கல்விக்கு ஒத்துழைக்கும் விதத்தில் முக்கியமான பல்வேறு சர்வதேச சட்ட ஆவணங்கள், பரிந்துரைகள், பிரகடனங்கள் மற்றும் வரைவுத்திட்டங்களுக்கான ஒரு திறத்தவராக இருப்பதுடன், தரமான முன்பள்ளிக் கல்வி உள்ளடங்கலாக, குறிப்பாக கல்விக்கான சிறுவர் உரிமைகள் தொடர்பாக அவற்றின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்குக் கடமைப்பட்டுள்ளது.



முக்கியமாக, 1989 ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சாசனம் (CRC) சமவாய்ப்பு என்ற அடிப்படையில் கல்வி ஒவ்வொரு பிள்ளைக்குமான சட்ட உரிமை என ஏற்றுக்கொள்கின்றது. அதன் பொது விளக்கக்குறிப்பு இல. 1 (2001) கல்வியின் இலக்கினை விளக்கும் போது கல்வியின் இலக்கு “பிள்ளையின் திறன்கள், கற்றல் மற்றும் ஏனைய ஆற்றல்கள், மானிட கௌரவம், சுய மரியாதை மற்றும் தன்னம்பிக்கை என்பவற்றை விருத்திசெய்வதன் மூலம் பிள்ளையை வலுவூட்டுவதாகும்” என குறிப்பிடுவதுடன், கல்விக்கான தேவை சிறுவரை மையப்படுத்தியதாகவும், சிறுவர் நேயமிக்கதாகவும் இருக்கவேண்டுமெனவும் அது பிள்ளையின் உரிமைகள் மற்றும் இயல்பான கௌரவத்தினை பிரதிபலிக்க வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றது.

அவ்வாறே, சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பொது விளக்கவுரை இல. 7 (2005) முன்பிள்ளைப் பருவத்தில் சிறுவர் உரிமைகளை அமுல்படுத்தல் தொடர்பாக விளக்குகின்றது. அதற்கேற்ப முன்பிள்ளைப் பருவத்தின் போது கல்விக்கான உரிமை பிறப்பிலேயே தொடங்குகின்றது என்றும் அவ்வுரிமை இளம் பிள்ளைகளின் அதிகபட்ச அபிவிருத்திக்கான உரிமையுடன் தொடர்புபடுகின்றது. அத்துடன், அரசாங்கங்கள் எவ்வித பாரபட்சமுமின்ற பிள்ளையின் ஆளுமை விருத்தி உள்ளிட்ட உள, உடல் விருத்தி நோக்கிக் கல்வியை வழிப்படுத்த வேண்டுமென கூறுகின்றது.

மேலும்,“ஒவ்வொரு சமுதாயத்திலுமுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் கல்வியின் நன்மைகளைக் கொண்டுசெல்லல்” என்ற சகலருக்கும் கல்வி (EFA) தொடர்பான உலகப் பிரகடனத்தின் தொலைநோக்கை மீள வலியுறுத்தும் விதத்தில் 2000 ஆம் ஆண்டில் உலகக் கல்வி மன்றத்தினால் இணைத்துக்கொள்ளப்பட்ட அனைவருக்கும் கல்வி தொடர்பான டாக்கா வரைவுத்திட்டமானது அதன் ஒரு இலக்காக விரிவான முன்பிள்ளைப் பருவப் பராமரிப்பு மற்றும் கல்வியை, குறிப்பாக மிகவும் இலகுவில் பாதிப்புக்குள்ளாகும் பின்தங்கிய சிறுவர்களுக்கு, விரிவுபடுத்துவதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. மேலும், அனைவருக்கும் கல்வி இலக்கிற்குரிய நாட்டின் ஒட்டுமொத்த முன்னேற்றமும் முதலாவது இலக்கினை அடைவதற்காக இணைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இயலாமையுடைய ஆட்களின் உரிமைகள் தொடர்பான சமவாயத்தின் 24 ஆம் உறுப்புரையானது முன்பள்ளிக்கல்வி வயதிலுள்ள பிள்ளைகளுக்கு பொருத்தமாக உள்ளதுடன், அது இயலாமையுடையோரின் கல்விக்கான உரிமையைப் பாதுகாப்பதுடன் உட்படுத்தல் கல்விக்கான உரிமையைப் பிரகடனப்படுத்தி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனப் பணிக்கின்றது. இவ்வுறுப்புரையானது இயலாமையுள்ள பிள்ளைகள் விடயத்தில் பாரபட்சம் காட்டக்கூடாதெனக் குறிப்பிடுவது மாத்திரமன்றி அவர்களுக்குப் பொதுக் கல்வி முறைமையில் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் பரிந்துரைக்கின்றது.

4 *United Nations Educational, Scientific and Cultural Organization and Right to Education Initiative, Right to education handbook (France, UNESCO, 2019).*

மேலும், வறுமையின் அனைத்து வடிவங்களையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அனைவருக்கும் நிலைபேறான சிறந்த எதிர்காலத்தை எய்துவதற்கான உலகளாவிய செயல்திட்டம் என்ற வகையில் 2016 ஆம் ஆண்டின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் நான்காவது இலக்கு அனைவரையும் உள்ளடக்கிய சமமான தரமான கல்வியை உத்தரவாதப்படுதற்கும் அனைவருக்கும் வாழ்நாள் நீடித்த கல்வி வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் சர்வதேச சமுதாயத்தின் அவதானத்தை மீளவலியுறுத்துகின்றன. அத்துடன், குறித்த இலக்கின் 4.2 வது குறிகோள் சகல ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் தரமான முன்பிள்ளைப்பருவ விருத்தி, அரவணைப்பு மற்றும் முன் ஆரம்பக்கல்வியை பெற்றுக்கொள்கின்றனர் என்றும், அதனால் அவர்கள் அனைவரும் 2030 ஆம் ஆண்டளவில் ஆரம்பக்கல்விக்கு ஆயத்த நிலையில் இருப்பார்கள் என்றும் அனைத்து நாடுகளும் உறுதிப்படுத்த வேண்டுமென வலியுறுத்துகின்றது.

மேலும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் அரச கொள்கை மற்றும் அடிப்படைக் கடமைகள் தொடர்பான வழிகாட்டல் கோட்பாடுகள் “சிறுவர்களும் இளைஞர்களும் உடல், உள, ஒழுக்க, சமய, சமூக விருத்திகளை உள்ளடக்கிய முழுமையான வளர்ச்சியை அடைவதை உறுதிசெய்யும் வகையில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென்றும், சுரண்டல் மற்றும் பாரபட்சம் என்பவற்றிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும்” பிரகடனப்படுத்துகின்றது.

சர்வதேச மற்றும் உள்நாட்டு ஆவணங்களில் பொதிந்துள்ள மேற்குறிப்பிட்ட உரிமைகள் மற்றும் இலக்குகளை விளங்கி இலங்கையில் முன்பள்ளித் துறையில் பிள்ளைகள் சேர்வதனை அதிகரித்து அதன் தரத்தினைத் மேம்படுத்த திறமையான முறையில் நிதியிட்டு நிருவகிப்பதற்கான முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.1 தேசிய சூழமைவில் முன்பள்ளிக் கல்விக் கொள்கை

1979 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட சிறுவர் செயலகம் தற்போது சிறுவர் விவகாரங்களுக்கான அமைச்சின் நியதிச்சட்ட முகவராகச் செயற்படுவதுடன் அது முன்பிள்ளைப்பருவப் பாரமரிப்பு மற்றும் விருத்திக் கொள்கைக்கு பொறுப்பாகச் செயற்படுவது மாத்திரமன்றி நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், இயைவுபடுத்தல், மதிப்பிடுதல் போன்ற பணிகளை மேற்கொள்கின்றது. குறித்த செயலகமானது 0-5 வயது வரையான பிள்ளைகளின் முழுமையான விருத்தி தொடர்பாகக் கவனம் செலுத்தி 2004 ஆம் ஆண்டு “முன்பிள்ளைப்பருவப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தியும் தொடர்பான தேசிய கொள்கையை” முன்வைத்தது. அத்துடன், 2019 ஆம் ஆண்டு குறித்த முன்பிள்ளைப்பருவப் பராமரிப்பும் அபிவிருத்தியும் தொடர்பான தேசிய கொள்கையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்திருத்தங்களில் இளம் பிள்ளைகளுக்கு விரிவான ஒன்றிணைந்த முன்பிள்ளைப்பருவ விருத்திக்கான சேவைகள் முக்கியத்துவமானவை என ஏற்றுக்கொண்டு முன்பள்ளிக் கல்வி வாய்ப்பினையும் தரத்தினையும் மேம்படுத்துவதற்கான பொருத்தமான கொள்கைக்கான பரிந்துரைகள் இணைத்துக்கொள்ளப்பட்டன.

1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழச் சட்டத்தின் உறுப்புரை 8 (1) இன் கீழ் தேசிய கல்விக் கொள்கையை உருவாக்கி வெளிப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதிக்குப் பரிந்துரைகளை முன்வைத்துத் தேவையான ஆலோசனைகளை (முன்பள்ளி கல்வி உள்ளடங்கலாக) வழங்கும் பொறுப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டத்தின் உறுப்புரை 2 (2) இன் பிரகாரம் தேசிய கல்விக் கொள்கை உள்ளடக்கும் விடயங்களாவன: கல்வியின் இலக்குகளும் நோக்கங்களும்: கல்வி முறைமையின் கட்டமைப்பு - முன்பள்ளிக் கல்வி, ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, மூன்றாம்நிலைக் கல்வி, உயர் கல்வி, முறையில் கல்வி, முறைசாராக் கல்வி, வளர்ந்தோர் கல்வி, விசேட கல்வி, தொழிற்கல்வி மற்றும் சமயகல்வி: கல்வி நிலையங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல், ஆசிரியர்களை ஆட்சேர்த்தல் உள்ளடங்கலாக அவற்றினை நிறுவுதல், இடம் மற்றும் பரம்பல்: கல்வியின் போதனா மொழி, கலைத்திட்ட விரிவாக்கம், பாடநூல்களும் கற்றல் சாதனங்களும், சமய அறிவிற்கான இடம், மேற்பார்வையும் கண்காணிப்பும், கணிப்பீடும் மதிப்பீடும், பரீட்சை முறைமை, சான்றிதழ்கள், டிப்ளோமா மற்றும் கல்வி விருதுகள் மற்றும் தகைமை ஏற்பு உள்ளடங்கலாக கல்வி உள்ளடக்கம்; ஆசிரியர்கள், துணைக்கல்வி உத்தியோகத்தர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளடங்கலாக கல்விச் சேவை உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு, நிலைப்படுத்தல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் தொழில்சார் விருத்தி: சமூதாய பங்கேற்றலை அணிதிரட்டல் உள்ளடங்கலாக கல்விக்கான வளங்கள் மற்றும் மதிய உணவு, சுகாதார மற்றும் பற்சிகிச்சை சேவைகள், உடற்கல்வி மற்றும் விளையாட்டுக்கள் உள்ளடங்கலாக கல்விக்கான துணைச் சேவைகள் என்பனவாகும்.

இலங்கை அரசியலமைப்பு அதன் 1987 ஆம் ஆண்டின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் முன்பள்ளிகளின் மேற்பார்வையும் மற்றும் முகாமைத்துவ பொறுப்புக்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாகாண சபைகள் இப்பணிப்பாணையை நடைமுறைப்படுத்தும் நோக்கில் அவற்றின் வழிகாட்டலின் கீழ் முன்பிள்ளைப்பருவ விருத்தி அல்லது முன்பள்ளிகளுக்கான அதிகார சபைகள், பணிமனைகள் அல்லது அலகுகளை (மாகாண ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகள்) அமைத்தன.

## 1.2 இலங்கையில் முன்பள்ளிக் கல்வியில் காணப்படுகின்ற சமகால பிரச்சினைகள்

இலங்கையில் முன்பள்ளிகள் வர்த்தக நோக்கிலான வியாபாரமாக அல்லது இலாப நோக்கற்ற அமைப்புக்களாக இயங்குகின்றன. அரசாங்கம் இத்துறைக்குத் தேவையான நியமங்கள் மற்றும் விதிமுறைகளைத் தயாரித்துள்ளது. இலங்கையிலுள்ள பிள்ளைகள் முன்பள்ளியில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் கல்வியைப் பெறுவது கட்டாயமானதல்ல. அவ்வாறே, முன்பள்ளிக் கல்வியானது முறைசார் கல்விக்கொள்கை மற்றும் நிர்வாக முறைமையின் ஒரு அங்கமாக இணைக்கப்படவுமில்லை.

இலங்கையில் முன்பள்ளிகள் முன்பள்ளி, மழலையர் பள்ளி (கின்டர்கார்ட்ன்), நர்ஸரி, மொன்டிசூரி அல்லது சிறுவர் விருத்தி நிலையம் போன்று பல்வேறு பெயர்களில் இயங்குகின்றன. அவற்றின் வேறுபாடுகள் பிள்ளைகள் கற்கின்ற சூழலில் இருந்து குறித்த கற்றலுக்கு பிரயோகிக்கப்படுகின்ற மொழிகள் மற்றும் கோட்பாடுகள் வரை வேறுபடுகின்றன.

இலங்கையில் முன்பிள்ளைப்பருவ விருத்தி நிலையங்கள் தொடர்பான 2017 ஆம் ஆண்டின் தேசிய தொகைமதிப்பு புள்ளிவிபரங்களின் படி[5]:

- மொத்தமாக 19,668 முன்பள்ளிகள் உள்ளன. அவற்றுள் 71 சதவீதமானவை தனியார் அமைப்புக்களால் அல்லது தனிநபர்களால் நிருவகிக்கப்படுகின்றன. மேலும், 19.8 சதவீதமானவை நகரசபை மற்றும் மாநகர சபை போன்ற அரச நிறுவனங்களாலும்

5 *Sri Lanka, Ministry of Women and Child Affairs, National Census of Early Childhood Development Centres in Sri Lanka 2016 (Colombo, 2018).*

அரசாங்க உள்ளூராட்சி அதிகார சபைகளாலும் நிருவகிக்கப்படுவதுடன் 6.8 சதவீதமானவை மதரீதியான அமைப்புக்களாலும் 3 சதவீதமானவை அரச சார்பற்ற அமைப்புக்களாலும் நிருவகிக்கப்படுகின்றன. அவற்றுள் 88.2 சதவீதமான முன்பள்ளிகளில் கட்டணம் அறவிடப்படுகின்றது.

- இரண்டு வயதுக்கும் (2) ஐந்து வயதுக்கும் (5) இடைப்பட்ட 578,160 பிள்ளைகள் முன்பள்ளிகளில் சேர்ந்துள்ளனர்.

  எனினும், முன்பள்ளிகளில் சேர்ந்துள்ளவர்களுள் பெரும்பாலானோர் அதாவது 84.9 சதவீதமானோர் 3 - 5 வயதுக்கும் இடைப்பட்டோர் ஆவர். இலங்கையில் 3 - 5 வயதுக்கும் இடைப்பட்ட முன்பள்ளிப் பிள்ளைகளின் சேர்வு வீதம் 55.6 சதவீதமாகும். இவ்வாறு சேர்ந்துள்ள சமவயதுடைய பிள்ளைகளுள் 50.3 சதவீதமானோர் ஆண் பிள்ளைகளும் 49.7 சதவீதமானோர் பெண் பிள்ளைகளும் ஆவர்.

- சேர்வு வீதத்தினைத் துறை ரீதியாக நோக்கும் போது நகரம் (67.6 சதவீதம்), கிராமம் (47.5 சதவீதம்) மற்றும் பெருந்தோட்டம் (43.9 சதவீதம்) ஆகிய துறைகளுக்கு மத்தியில் கவனத்திற்கொள்ளத்தக்க வேறுபாடு அல்லது சமமின்மை காணப்படுகின்றது.

- முன்பள்ளிகளில் வேலைசெய்கின்ற 28,449 ஆசிரியர்களுள் 59.9 சதவீதமானோர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவராவர்.

- ஆசிரியர்களுள் 49.7 சதவீதமானோர் ஒன்று முதல் இரண்டு வருட தொழில்சார் தகைமையினை பூர்த்திசெய்திருந்தாலும் 9.5 சதவீதமானோருக்கு எத்தகைய தொழில்சார் தகைமைகளையும் பெற்றுக்கொள்ளவில்லை.

தனியார் மற்றும் அரச முன்பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கையில் ஒட்டுமொத்த அதிகரிப்பு காணப்பட்டாலும் அதிகமான முன்பள்ளிகள் தனியார் சேவை வழங்குநர்களின் இலாபத்துக்காகவே நிருவகிக்கப்படுகின்றன. எனவே, வழங்கல், மேற்பார்வை, ஒழுங்குவிதி மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றுக்கான அரச முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இதனால், கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை இணைக்கவும் தீர்மானங்களை இயைபு படுத்துவதற்குமான முறைமை மிகவும் பலவீனமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது.[6]

இந்நிலை இலங்கையில் பிள்ளைகளின் கற்றலிலும் விருத்தியிலும் குறிப்பிடத்தக்க விரிவான, நீடித்த முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கு முன்பள்ளிகளுக்கு இருக்கின்ற இயலுமையை மோசமாகப் பாதித்துள்ளது.

முன்பள்ளித் துறையில் வாய்ப்புகள், தரம் மற்றும் ஆளுகை தொடர்பாக பல்வேறு முக்கிய சவால்கள் நிலவுகின்றன.

இலங்கையில் முன்பள்ளித் துறையிலுள்ள பிரதான சவால் யாதெனில் 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளில் அநேகமானோர் முன்பள்ளிக்கு செல்வதில்லை என்பதாகும். 2017 ஆம் ஆண்டில், 3 - 5 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுள் 55.6 சதவீதமானோர் மாத்திரமே முன்பள்ளிக்கு சமூகமளித்துள்ளனர். மேலும், வயது அடிப்படையில் தொகுக்கப்பட்ட தரவுகளின்படி 3 வயதுடைய பிள்ளைகளுள் 22.6 சதவீமானோரும் 4 வயதுடைய (உத்தியோகபூர்வ பாடசாலை நுழைவுக்கு ஒரு வருடம் முன்பு) பிள்ளைகளுள் 63.4 சதவீதமானோருமே முன்பள்ளிகளுக்கு

6 *United Nations Children's Fund, "Required Investments to Deliver High Quality Early Childhood Education (ECE) in Sri Lanka", discussion paper presented at the 'Building Brains, Building Futures' - Sri Lanka Early Childhood Development High-Level Meeting, July 2018.*

சமூகமளித்துள்ளனர். கடந்த பத்து வருடங்களில் பிள்ளைகளின் வரவு குறைந்தளவிலேயே அதிகரித்துள்ளது. இது மாவட்ட ரீதியில் பெரிதும் வேறுபடுகின்றது. ஒரு சில மாவட்டங்களில் இவ்வாறு பிள்ளைகளின் வரவு குறைந்திருப்பதற்கான பிரதான காரணங்களாக வீட்டுக்கு அருகில் முன்பள்ளி இல்லாமை, அதிக சேர்வுக்கட்டணம், அதிக கல்விக் கட்டணம், பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு முன்பள்ளி கல்வியில் நன்மை இருப்பதாகக் கருதாமை, அத்தகைய சேவைகளைக் கோராமை என்பவற்றை இனங்காண முடியும். அத்துடன், ஒரு சில முன்பள்ளிகளே விசேட தேவையுடைய பிள்ளைகளின் தேவைகளை கவனிக்கின்றன.

இலங்கையில் முன்பள்ளிக் கல்வியின் தராதரம் ஒரு முக்கிய சவாலாகும். முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சித்திட்டமும் அதன் அமைப்புக்களும் பிள்ளைகளின் கற்றலுக்கும் விருத்திக்கும் எவ்விதத்தில் உதவும் என்பதை வைத்தே அதன் தராதரம் தீர்மானிக்கப்படுகின்றது. வழிகாட்டல்கள் மற்றும் நியமங்களை அறிமுகப்படுத்துவதில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டாலும் அதிகரித்துள்ள தரம் சீரற்றதாக அல்லது தரம் குறைந்தளவிலேயே அதிகரித்துள்ளது. உயர் பண்புத்தரத்துக்கான குறைந்தபட்ச அத்தியாவசிய மூலக்கூறுகளின் செயற்பரப்பினை கருத்திற்கொண்டால் செயற்பரப்பின் மிகவும் கீழ்நிலையிலுள்ள முன்பள்ளிகளுக்கு சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத வேளையில் செயற்பரப்பின் மறு நிலையிலுள்ள முன்பள்ளிகள் பிள்ளைகளின் பௌதீகரீதியான நலனை உறுதிப்படுத்தினாலும் வயது ரீதியாகவும் தனியாள் ரீதியாகவும் பொருத்தமான கற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் வழங்கப்படுவதில்லை.

இலங்கையில் 3 தொடக்கம் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு முன்பிள்ளைப் பருவ விருத்தி நியமங்கள் காணப்படுகின்றன. பிள்ளைகளின் கல்விக்குப் பங்களிப்பு செலுத்துபவர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் வளர்ந்தோரில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு சிலரே அவற்றை வளங்களாக ஏற்றுப் பிரயோகிக்கின்றனர். சேவை வழங்குநர்கள் அனைவரும் அமுல்படுத்தும் விதத்தில் தேசிய கலைத்திட்ட சட்டகமொன்று இல்லை. இலங்கையில் முன்பள்ளிகளுக்கான வழிகாட்டல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதும் இவ்வாறான வழிகாட்டல்களை அமுல்படுத்துமாறு தேசிய ரீதியாக வழிப்படுத்தி செயற்படுத்தக்கூடிய பண்புத்தர கட்டுப்பாட்டு பொறிமுறையொன்று இல்லாமையினால் மாகாண அதிகார சபைகள் தமக்கெனத் தனியான குறைந்தபட்ச தராதர நியமங்களை விருத்திசெய்துகொள்கின்றன. இதன் விளைவாக வகுப்பறை அமைப்பு, நடைமுறைகள் மற்றும் மாணவர்களுடைய கற்றலில் தேசிய முறைமையானது ஆகக் குறைந்த தராதரத்தில் தோல்வியடைந்துள்ளது. அவ்வாறே, தொழில்நுட்ப உதவி மற்றும் விருத்தி தொடர்பாக அறிவிப்பதற்கு நிகழ்ச்சித்திட்டங்களின் பண்புத்தரத்தை கண்காணிக்கவும், மதிப்பிடவும், மேம்படுத்தவும் முன்பள்ளிக் கல்வி முறைமையில் முறையான முறைகளோ அல்லது நிபுனர்களோ போதியளவில் இல்லை.

தரமான முன்பள்ளி அனுபவங்களை வழங்குவதற்குப் போதியளவு ஆயத்த நிலையில் முன்பள்ளி ஆசிரியர்களும் ஒத்துழைப்பு வழங்கும் பராமரிப்புப் பணியாளரும் இல்லாமை மேலும் ஒரு பிரச்சினையாகும். முன்பள்ளியில் கற்பிப்பதற்கான நுழைவுத் தகைமை குறிப்பிட்டுக் கூறப்படவில்லை. மூன்றாம்நிலைத் தகைமைகள் தேவையில்லை. முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுக்கும் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் சம்பளத்துக்குமிடையில் பாரிய வேறுபாடு காணப்படுவதுடன் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நிலையான கொடுப்பனவுத் திட்டமும் இல்லை. அவ்வாறே, முன்பள்ளி ஆசிரியர்களுக்குத் தொழில்வழிச் சட்டகமும் இல்லை. அத்துடன், அவர்களின் சேவைக்கு தொழில் சான்றிதழோ அல்லது காலத்துக்கு காலம் அவர்களின் தொழிலுக்கான அங்கீகாரமோ வழங்கப்படுவதில்லை. அரசாங்கத்தினாலும் ஏனைய அபிவிருத்திப் பங்காளிகளாலும் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு வழங்கப்படுகின்ற பல்வேறு பயிற்சிகள் நேரடியான திறன்களையோ கணிப்பிடப்பட்ட பயிற்சி தேவைகளாகவோ இல்லை. பிள்ளைகள் தமது ஆசிரியருடன் கொண்டிருக்கும் இடைத்தாக்கங்களே முன்பிள்ளைப் பருவக் கல்வியின் தரத்தைத் தீர்மானிக்கும் மிகமுக்கிய பண்புக்காரணியாக உள்ளது. ஆகவே

முன்பள்ளி ஆசிரியரின் தராதரத்தை உயர்த்துதலும் சமூகத்தில் அவர்களின் வாண்மையாளர் அந்தஸ்தை உயர்த்தலும் வலுவான முன்பள்ளிக் கல்விக்கான முன்தேவையாக உள்ளன.

பிள்ளைகள் கற்றல் விளைவுகளை அடைவதென்பது பெற்றோர்களினதும் ஆசிரியைகளினதும் கூட்டுப்பொறுப்பு என்ற உண்மையைச் சரியாக புரிந்துகொள்ளாததன் காரணத்தினால் இன்று பிள்ளைகளின் முன்பள்ளிக் கல்வியில் பெற்றோர் மிகவும் வரையறுக்கப்பட்ட ஈடுபாட்டினையே கொண்டுள்ளனர் என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது. முன்பள்ளிகள் ஆரம்பப் பாடசாலையில் நுழைவதற்கு ஆயத்தம் செய்யும் கல்வி நிலையம் என நோக்கப்படுவதனால் பெற்றோர் முன்பள்ளிக் கல்விக்கு மிகவும் குறைவான முக்கியத்துவத்தை வழங்குகின்றனர்.[7] எவ்வாறு பெற்றோருக்கு தமது பிள்ளைகளின் விடயத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான ஒத்துழைப்பும் ஆலோசனை சேவைகளும் கிடைக்கப்பெறுவதில்லையோ அவ்வாறே பெற்றோரை முன்பள்ளி விவகாரங்களில் ஈடுபடுத்துவதில் ஆசிரியைகளுக்கும் ஆற்றல் அல்லது வளங்களோ இல்லை.

மேலும், இலங்கையில் முன்பள்ளி தொடர்பான தரவுகளையும் ஆராய்ச்சி தகவல்களையும் பயனாளிகளிடமிருந்தும் முறைமைகளிலிருந்து பகுதி பகுதியாக சேகரித்து கொள்வது கடினமாக இருப்பதனால் அரசாங்கமானது கொள்கை வகுத்தல், வினைத்திறன்மிக்க வள ஒதுக்கீடு மற்றும் விளைதிறனுள்ள அரச சேவை வழங்கலுக்கு அவற்றை பயன்படுத்த முடியாதுள்ளது.

இலங்கையில் சிறுவர்களுக்காகப் பணியாற்றும் அரசாங்க முகவர்கள் முழுவதிலும் குறிப்பிடத்தக்க செங்குத்தான மற்றும் கிடையான ஒருங்கிணைப்பிலும் தலைமைத்துவத்திலும் இடைவெளிகள் நிலவுகின்றன. இலங்கையில் இணைப்பினையும் நிறுவன ரீதியான ஆற்றலினையும் வலுப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் எதிர்பார்ப்புக்களை விட மிகவும் குறைவான பெறுபேறுகளே கிடைக்கப்பெற்றுள்ளன. முன்பள்ளி முறைமையின் நிருவாக பன்முகப்படுத்தலும் தெளிவற்ற வகிபங்கும் மாகாணங்கள் முழுவதிலும் தரரீதியான வரைவுத்திட்டங்களிலும் நியமங்களிலும் மற்றும் முன்னேற்றத்திலும் சீரின்மைக்கு வழிவகுத்துள்ளதுடன் முதல்நிலை வேலையாட்களின் வகிபங்குகளும் பொறுப்புக்களும் ஒன்றிலொன்று படிந்துள்ளன. முன்பள்ளிச் சேவைகளை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் போதிய நிலையான அரச முதலீடு தேவைப்படுகின்றது.

இலங்கையில் கல்விக்கான அரச முதலீடு மொத்ததில் அதிகரிக்கப்பட்டு வருகின்ற போதிலும் முன்பள்ளிகளுக்கான அரச செலவுகள் மிகவும் கீழ்நிலையிலேயே உள்ளதனால் இலங்கை ஏனைய நடுத்தர வருமான மற்றும் உயர் வருமானமுள்ள நாடுகளைவிட பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.[8] தனியார் நிதிகளில் தங்கியிருப்பதனால் முன்பள்ளித் துறையில் சமமின்மையும் உறுதியற்ற நிலையும் தொடர்ந்து நிலவுகின்றது.

இத்தகைய முக்கியமான சவால்கள் நாடு முழுவதிலும் தரமான முன்பள்ளிக் கல்வியைத் தொடர்ச்சியாக வழங்கப்படுவதனை பலவீனப்படுத்தியதன் காரணமாக தேசிய கொள்கையினால் தயாரிக்கப்பட்டுள்ள முன்பள்ளித் துறையை பலப்படுத்துவதற்கு முறையான அணுகுமுறையொன்று அவசியமாகின்றது.

---

7 *Saurav Dev Bhatta, Roshini Mary Ebenezer, and Quynh T. Nguyen, Laying the Foundation for early childhood education in Sri Lanka: investing early, investing smartly, and investing for all (Washington, D.C., World Bank Group, 2014).*

8 *Halil Dundar, Benoît Millot, Michelle Riboud, Mari Shojo, Harsha Aturupane, Sangeeta Goyal, and Dhushyanth Raju, Sri Lanka education sector assessment: achievements, challenges, and policy options (Washington, D.C., World Bank Group, 2017).*

2

# 2. முன்பள்ளிக் கல்வி பற்றிய தேசியக் கொள்கை

## 2.1 தேசியக் கொள்கையின் நோக்கமும் வழிகாட்டல் கோட்பாடுகளும்

ஒவ்வொரு பிள்ளையின் உரிமை என்ற வகையிலும் பொது பண்டம், பொது பொறுப்பு என்ற வகையிலும் பிள்ளையின் அபிவிருத்திக்கு முன்பள்ளி கல்வி முக்கியமானதென அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென தேசிய கொள்கை வலியுறுத்துகின்றது.

"எவரையும் பின்தங்க விடுவதில்லை" மற்றும் சகல பிள்ளைகளும் தகுதியுள்ள கற்பவர்கள் என்பதுடன் முழுமையான சூழமைவில் வளர்கின்ற கற்கின்ற உரிமையுள்ளவர்கள் என்ற நோக்கில் தேசிய கொள்கையானது முன்னேற்றகரமான உலகளாவிய அணுகுமுறைகளைப் பின்பற்றி இலங்கையில் தரமான முன்பள்ளிக் கல்வியை வழங்குவதற்கு நடைமுறைச் சாத்தியமான, பரஸ்பரம் மீள்வலியுறுத்தும் உபாய ரீதியான அணுகுமுறைகளை உருவாக்கிப் பலப்படுத்துகின்றது.

நாட்டிலுள்ள அனைத்து முன்பள்ளிகளும் ஒரு சில தரநியமங்களை அடைவதை உறுதிப்படுத்தும் விதத்தில் முன்பள்ளித் துறையை விருத்திசெய்யவும் ஒழுங்குபடுத்தவும் அரசாங்கம் இத்தேசிய கொள்கையினூடாக நிபந்தனைகளை உருவாக்கின்றது. அரசாங்கம் இலங்கையிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்கும் முன்பள்ளிக் கல்வி கிடைக்கும் விதத்தில் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுகின்றது.

அத்துடன், அரசாங்கம் முன்பள்ளி கல்வியில் தனியார் சேவை வழங்குநர்களின் பங்குபற்றலை வரவேற்பதுடன் அதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் வழங்குகின்றது.

இந்தத் தேசிய ரீதியான கொள்கையானது மூன்று முதல் ஐந்து வயதிற்கிடைப்பட்ட பிள்ளைகளை இலக்காக கொண்ட நிலைய அடிப்படை முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்துக்கும் பிரயோகிக்ககூடியது.

முன்பள்ளிக் கல்வி தொடர்பான தேசியக் கொள்கையை அமுல்படுத்துவதனூடாக உயர்தர முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டங்களில் அதிகமான பிள்ளைகள் சேர்ந்து தர ரீதியாக பயனடைவார்கள். ஜனநாயக மற்றும் நிலைபேறான சமூகங்களில் செயலூக்கமுள்ள பிரஜைகளாக இருப்பதற்கான தேர்ச்சிகளை கொண்டிருப்பர். அரசாங்கத்தின் வருமானம் சேமிக்கப்படும். இலங்கைக்கு கற்ற தொழில்சார் முன்பள்ளி பணியாளர் தொகுதியொன்று இருக்கும். முக்கியமாக, சிறப்பான ஆளுமை உருவாகும் முன்பள்ளிப் முறைமையினூடாக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் கூறியவாறு "2030 ஆம் ஆண்டளவில் சகல ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் தரமான முன்பிள்ளை பருவ விருத்தி பராமரிப்பு மற்றும் முன்ஆரம்ப வகுப்புக் கல்வி வாய்ப்பினை பெற்று முன்ஆரம்பகல்விக்கு ஆயத்தநிலையில் இருப்பார்கள் என்பதை உறுதிப்படுத்தல்" என்ற நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை அடைவதனை உறுதிசெய்வதாக இருக்கும்.

## கொள்கை வழிகாட்டல்கள்

முன்பள்ளிக் கல்வி பற்றிய தேசிய கொள்கையானது அதன் இலக்குகளை அடைந்து கொள்வதில் பிள்ளை விருத்தி பற்றிய பின்வரும் உலகளாவிய கோட்பாடுகளால் வழிப்படுத்தப்படுகின்றது.

- சகல பிள்ளைகளும் வாழ்வதற்கும், பிழைத்து வாழ்வதற்கும் அபிவிருத்திக்கும் இயல்பான உரிமை உண்டு. அவர்களின் கல்விக்கான உரிமையானது பிறப்புடன் தொடங்கி அவர்களின் முழுமையான ஆளுமையை விருத்தி செய்து கொள்வதற்கான உரிமையுடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளது.
- ஒவ்வொரு பிள்ளையும் சமமாக மதிக்கப்படுதல் மற்றும் உதவப்படுதல் வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பான பராமரிப்புடனான சூழல் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் விதத்தில் முன்-பள்ளிஅமைப்பில் இனம், மொழி, நிறம், பரம்பரை, தேசிய பிறப்பிடம், மதம், மத நடைமுறை, பெற்றோரின் அந்தஸ்து, பௌதீக அல்லது உள ரீதியான குறைபாடு, பால்நிலை அல்லது சமூக பொருளாதார நிலைகள் என்ற அடிப்படையிலமைந்த எவ்வகையான வேறுபாடுகளும் காட்டப்படமாட்டாது.
- பிள்ளைகள் சமமாகக் கவனிக்கப்பட்டாலும் அதிக தேவையுடைய மேலும் பேராபத்திலுள்ள பிள்ளைகளுக்கு முன்பள்ளிக் கல்வியில் விசேட கவனம் செலுத்தப்பட்டால் அவர்களால் முழுமையான ஆற்றலை பூர்த்திசெய்துகொள்ள முடியும். இது எங்கும் வியாபித்துள்ள வறுமை சக்கரத்தையும் இலகுவில் பாதிப்புறும் நிலையையும் உடைத்தெறிய உதவும்.
- பிள்ளை விருத்தி முழுமையானது, மேலும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ள பரிமாணங்களைக் கொண்டது. எனவே, முன்பள்ளிக் கல்வியில் பிள்ளையின் பல தரப்பட்ட தேவைகளுக்குத் தீர்வுகளை முன்வைக்கின்ற முழுமையான ஒருங்கிணைந்த அணுகுமுறையை இணைத்துக்கொள்ள வேண்டும்.
- கற்றல் என்பது தொடர்ச்சியானது, திரளானது. பிள்ளை விளையாட்டினூடாக கற்றுக்கொள்கின்றது. எனவே,பிள்ளைகளின் தெரிவுக்கும் இயல்பான கற்றல் முறைகளுக்கும் மதிப்பளிக்கின்ற விளையாட்டினை அடிப்படையாககொண்ட பிள்ளை-மையச் செயற்பாடுகளை வழங்குவதன் மூலம் பிள்ளைகளின் தெரிவுகளுக்கும் இயல்பான கற்றலுக்கும் உதவலாம்.
- பிள்ளைகள் அவர்களின் சொந்த அறிவை கட்டியெழுப்புவார்கள். அவர்களின் கற்றலானது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற சுற்றுச்சூழலின் தரத்திலும், மேலும் அவர்களின் சொந்த கற்றலை திட்டமிடல், பங்கேற்றல் மற்றும் மதிப்பிடுதல் என்பவற்றில் உள்ள ஈடுபாட்டிலும் தங்கியுள்ளது.
- சகல பிள்ளைகளும் திறமையானவர்கள், கற்பதற்குத் தகுதியானவர்கள். ஆனால் ஒவ்வொருவரும் அவர்களுக்கே உரிய வேகத்திலேயே தம்மை விருத்தி செய்துகொள்வார்கள். எனவே, முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்ற கற்றல் அனுபவங்கள் பொருத்தமான விதத்தில் விருத்தியடையகூடியதாக (வயது மற்றும் தனிப்பட்ட ரீதியாக) இருக்க வேண்டும்.
- பிள்ளைகள் அவர்களின் சகபாடிகள், குடும்பம், சமுதாயம், கலாசாரம், நிகழ்ச்சிகள் மற்றும் சூழ்நிலைகள் என்பன கற்றலிலும் விருத்தியிலும் செல்வாக்கு செலுத்துகின்ற சூழமைவிலேயே வாழ்கின்றனர். எனவே, முன்பள்ளிக் கல்வி ஊழியர்படை கற்றல் அனுபவங்களை ஒழுங்குபடுத்தி வழங்கும்போது சூழமைவு உணர்வு பூர்வமானதாக இருக்க வேண்டும்.
- பிள்ளை விருத்தியும் கற்றலும் பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கூட்டுப் பொறுப்பாகும். எனவே, பிள்ளைகள் தமது முன்பள்ளிச் சூழலிலும் வீட்டு சூழலிலும் கற்கவும், வளரவும் மதிப்பளிக்கப்படுவதை உணரவும் பெற்றோரின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானது.
- பிள்ளைகள் தமது தாய்மொழியில் அல்லது வீட்டுமொழியில் சிறப்பாக கற்கின்றார்கள். எனவே, வீட்டுக்கும் முன்பள்ளிக்கும் இடையிலான இலகுவான மாறுதலை அனுமதிப்பதற்கு முன்பள்ளிச் சூழல் பிள்ளைகள் தாய்மொழியைப் பயன்படுத்துமாறு ஊக்குவிக்க வேண்டும்.

## 2.2 தொலைநோக்கும் பணிக்கூற்றும்



### தொலைநோக்கு

அனைத்து முன்பள்ளி வயதிலுள்ள பிள்ளைகளும் அவர்களின் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலை அடைவதை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட சூழலில் செழித்தோங்குகிறார்கள், கற்கின்றார்கள்.

### பணிக்கூற்று

மிகவும் இலகுவில் பாதிப்புறக்கூடிய மற்றும் பின்தங்கிய பிள்ளைகள் உள்ளடங்கலாக முன்பள்ளி வயதிலுள்ள பிள்ளைகளின் வினைத்திறனுடைய, துலங்கல்மிக்க, வகைகூறலுடைய, வள ஆற்றல்மிகுந்த முன்பள்ளி முறைமையினூடாக இலங்கையில் உயர்தரமான, சம வாய்ப்புள்ள மற்றும் இயலத்தக்க முன்பள்ளிக் கல்வியை ஊக்குவித்தலும் வசதிப்படுத்துதலும்.

## 2.3 விசேட குறிக்கோள்கள்

தேசிய கொள்கையின் விசேட ஒன்றிலொன்று தங்கியுள்ள குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. முன்பள்ளி வயதிலுள்ள பிள்ளைகள் தமது முழுமையான ஆற்றலை அடைய உதவும் விதத்தில் சமமான மற்றும் சகலரையும் உள்ளடக்கும் கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திகொடுத்தல்.

2. பிள்ளைகளின் அனுகூலமான விருத்தியை ஊக்குவிப்பதற்கு உயர் தரமுடைய முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டங்களை வசதிப்படுத்துதல்

3. முன்பள்ளிக் கல்விப் பணியாளர்களின் தகைமைகள், பயிற்சி மற்றும் வேலை நிலைமைகள் என்பவற்றை மேம்படுத்துதல்

4. பிள்ளைகளின் முதலாவதும் மிகவும் நீண்டகாலக் கல்வி வழங்குனராகவும் பெற்றோரையும், குடும்பத்தையும் மற்றும் சமூதாயத்தையும் ஈடுபடுத்துதல்

5. சான்றுகளின் அடிப்படையிலான தீர்மானம் மேற்கொள்ளும் நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் தரவுகளையும் ஆராய்ச்சிகளையும் பயன்படுத்தி விருத்தியை ஊக்குவித்தல்.

6. முன்பள்ளிக் கல்விக்கான வள ஒதுக்கீட்டையும் ஆளுகையயையும் மேம்படுத்தல்.

# 3. நடவடிக்கைக்கான பகுதிகள்

தேசிய கொள்கையின் ஆறு விசேட குறிக்கோள்களும் நடவடிக்கைக்கான ஆறு பகுதிகளையும் அனுசரித்தே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு நடவடிக்கைக்கான பகுதியும் இக்கொள்கையின் குறிக்கோள்களை அடையும் விதத்தில் உபாயங்களுடனான கொள்கை கூற்றினால் நெறிப்படுத்தப்படுகின்றது.

1. முன்பள்ளிக் கல்வியில் நியாயமான வாய்ப்பு
2. முன்பள்ளிக் கல்வியின் தரம்
3. முன்பள்ளிக் கல்விப் பணியாளர்களின் விருத்தி
4. பெற்றார், குடும்பம் மற்றும் சமுதாய பங்கேற்றல்
5. தரவுகள்,ஆராய்ச்சி, மதிப்பீடும் மற்றும் ஆவணப்படுத்தலும்
6. ஆளுகையும் நெறிப்படுத்தலும்

## 3.1 முன்பள்ளிக் கல்வியில் நியாயமான வாய்ப்பு

1

### கொள்கை 1:

இலங்கையில் முன்பள்ளி வயதிலுள்ள சகல பிள்ளைகளையும் உள்ளடக்கும் முன்பள்ளிக் கல்விக்கான நியாயமான வாய்ப்பை உறுதிப்படுத்துதல்.

கொள்கை கூற்று

### உபாயங்கள்

3.1.1 கடன், பயிற்சி மற்றும் ஆலோசனைச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை மேம்படுத்தி முன்பள்ளிகளுக்கான நிலைபேறான உட்கட்டமைப்பினையும் அணுகத்தக்க வாய்ப்பினையும் வசதிப்படுத்தல்

3.1.2 முன்பள்ளிகளுக்கான பௌதீக வளங்களை வழங்கும்போது முன்பள்ளியில் சேர்வு குறைவாகவுள்ள பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு தேசிய மற்றும் மாகாண ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளை ஊக்குவித்தல்.

3.1.3 வறுமை, வன்முறை, அனர்த்தம், பால்நிலை பாகுபாடுகள், நிறுவனமயப்படுத்தப்பட்ட பாராமரிப்பு மற்றும் சிறைச்சாலைகளில் பெற்றோருடன் வாழும் பிள்ளைகள் ஆகியோருக்கு மாகாண ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகளால் முகாமைத்துவம் செய்யப்படும் முன்பள்ளிகளின் வலையமைப்பை வலுப்படுத்தல்.

3.1.4 சமூக பாதுகாப்பு திட்டங்களிலிருந்து உதவி பெறுகின்ற அல்லது உதவி பெறுவதற்கு தகுதியுடைய குடும்பங்களின் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வதற்குத் தகுதியான இலாப நோக்கற்ற முன்பள்ளிகளுக்கு பிள்ளை அடிப்படையில் மானியங்களை அறிமுகப்படுத்துதல்.

3.1.5 அதிக பாதிப்புக்குள்ளான, மற்றும் அதிகம் பின்தங்கிய பிள்ளைகள் முன்பள்ளிக் கல்வியிலிருந்து நன்மை பெறும் விதத்தில் முன்பள்ளி அமைப்பில் உட்படுத்தல் செயற்பாடுகளை வசதிபடுத்துவதற்கான வளங்களையும் வழிகாட்டலையும் அறிமுகப்படுத்துதல்.

3.1.6 முன்பள்ளி வகுப்பறையில் பன்முகத்தன்மை மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தலை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை ஊக்குவித்தல்.

3.1.7 அவசரகாலத் தயார்நிலைக்கான தேசிய நியமங்களையும் வழிகாட்டல்களையும் உருவாக்குதல். மேலும், அவசரகாலத்தின் போதும் அதன் பின்னரும் முன்பள்ளிச் சேவைகள் தடைபடாது தொடர்ந்தும் இயங்குவதை உறுதிப்படுத்தல்.

3.1.8 கொள்கை வகுப்பாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியில் முன்பள்ளிக் கல்விக்கு ஒத்துழைப்பு வழங்கும் ஆர்வத்தை ஊக்குவித்தல்.

## 3.2 முன்பள்ளிக் கல்வியில் தரம்

### கொள்கை 2:

இலங்கையிலுள்ள முன்பள்ளி வயதிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் அவர்களின் முழுமையான விருத்தி மற்றும் பாடசாலைக்கான ஆயத்தநிலையை அதிகரிக்கும் விதத்திலான உயர் தரமான கற்றல் வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல்.

### உபாயங்கள்

3.2.1 முன்பள்ளிக் கலைத்திட்டம் மற்றும் நடைமுறைக்கான அடிப்படை வழிகாட்டல் என்ற வகையில் தேசிய ஆரம்பப்பிள்ளைப் பருவ விருத்தி நியமங்களைப் பயன்படுத்தி வினைதிறன்மிக்க கல்வி ரீதியான அமுலாக்கத்தை ஊக்குவித்தலும் வசதிப்படுத்தலும்.

3.2.2 முன்பள்ளிக் கல்வி அபிவிருத்திக்கேற்ற தேசிய கலைத்திட்டச் சட்டகத்தை விருத்தி செய்து அபிவிருத்தியையும் அமுலாக்கலை ஊக்குவித்தும் அதனைக் கடைப்பிடிக்கத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதல்.

3.2.3 முன்பள்ளிச் சூழலில் ஏனைய மொழிகளின் நியாயமான பயன்பாட்டுடன் தாய் மொழி அடிப்படையிலமைந்த கல்வியின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்.

3.2.4 கற்றலுக்குத் தேவையான உயர் தரத்திலான பிரயோகங்கள் மற்றும் சூழலுக்கான நிலைமைகளை உருவாக்குவதற்கு முன்பள்ளிகளுக்கென (உட்கட்டுமானம் மற்றும் சேவை விநியோகம்) ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய பண்புத்தர நியமங்களை விருத்திசெய்து, ஊக்குவித்து வசதிப்படுத்தல்.

2

கொள்கை கூற்று

3.2.5 முன்பள்ளிச் சேவை வழங்குநர்களை கண்காணிக்கவும் மேற்பார்வை செய்யவும் நியமங்களின் அடிப்படையிலமைந்த பொதுக் குறிகாட்டிச் சட்டகமொன்றை மாகாண அதிகார சபைகளுக்காக விருத்திசெய்தல்.

3.2.6 மத்திய நிலைய அடிப்படையிலமைந்த முன்பள்ளி சேவை வழங்குநர்களுக்கான தேசிய தரப்படுத்தல் முறைமையொன்றினை விருத்திசெய்தல். தேசிய மற்றும் மாகாண ரீதியான தரநியமங்களுக்கேற்ப சேவைகள் மதிப்பீடு செய்யப்படும்.

3.2.7 பிள்ளைகளின் கற்றல் விருத்தி மற்றும் பாடசாலைக்கான ஆயத்தநிலை என்பவற்றைக் கணிப்பிடுதற்காக தேசிய முன்பிள்ளை பருவ விருத்தி நியமங்களின் அடிப்படையிலமைந்த செல்லுபடியான மதிப்பீட்டுக் கருவிகளின் காலரீதியான மற்றும் முறைப்படியான விநியோகத்தினை எளிதாக்குதலும் ஊக்குவித்தலும்

3.2.8 ஆரம்பக் பாடசாலைக்குரிய சீரான நிலைமாற்றத்துக்கு உதவும் வகையில் முன்பள்ளிகளுக்கும் ஆரம்பப் பாடசாலைகளுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்தல்

3.2.9 விளையாட்டு அடிப்படையிலான கற்றலை ஊக்குவிக்கும் விதத்தில் நகரங்கள் மற்றும் மாநகரங்களில் சிறுவர்-நேய பொது இடங்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கான முதலீடுகளை மேற்கொள்ளல்.

3.2.10 முன்பள்ளி வயதிலுள்ள பிள்ளைகளுக்கு இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் நல்ல கல்வி நிகழ்ச்சித்திட்டங்களைக் கிடைக்கசெய்தல்.

3.2.11 முன்பள்ளிகளுக்கும் முன்பள்ளி வயது பிள்ளைகளுக்குமென வர்த்தக அல்லது வர்த்தகம் அல்லாத நோக்கத்துடன் தயார்செய்கின்ற கல்வி ரீதியான சாதனங்களில் (அச்சு மற்றும் இலத்திரனயில்) பொருத்தப்பாட்டை மதிப்பிடுவதற்கு ஒழுங்குபடுத்தும் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

## 3.3 முன்பள்ளிக் கல்விப் பணியாளர்களின் விருத்தி

3

கொள்கை கூற்று

### கொள்கை 3:

முன்பள்ளி பிள்ளைகளின் வழிகாட்டற் பணியில் ஈடுபட்டுள்ள முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தொடக்க மற்றும் தொடர்ச்சியான தொழில்சார் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்க வேண்டும். மேலும்,அவர்களுக்கு வினைத்திறன் மற்றும் விளைதிறன் சார்ந்த கொள்கைகள், கண்ணியமான வேலை நிலைகள், தொழில்சார் சுயஅதிகாரம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள் என்பவற்றிலிருந்து போதிய ஒத்துழைப்புக் கிடைக்க வேண்டும்.

### உபாயங்கள்

3.3.1 பிள்ளைகளுடன் பணியாற்றுவதற்காக தனிநபரின் தகுதிகளை முறையாக அங்கீகரிப்பதற்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நம்பத்தகுந்த ஆவண முறைமையை அறிமுகப்படுத்துதல்.

3.3.2 முன்பள்ளி ஆசிரியர்களின் தொழில் அந்தஸ்தை மேம்படுத்துவதற்கு வெகுமதி மற்றும் நலன்கள் தொடர்பான நியமங்களை உருவாக்குதல்.

3.3.3 முன்பள்ளி ஆசிரியர்கள் தமது கல்வி மட்டங்கள், அனுபவம், தேர்ச்சிகள் என்பவற்றை அதிகரித்து தொழில்ரீதியாக தம்மை முன்னேற்றிக்கொள்ளும் விதத்தில் மாகாண மட்டத்தில் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழில் வாய்ப்புக்களையும் பொருத்தமான வெகுமதிகளையும் விருத்திசெய்தல்.

3.3.4 முன்பள்ளிப் பணியாளர்களுக்கு சான்றிதழ், டிப்ளோமா, பட்டம் மற்றும் பட்டப்பின் மட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து வழங்குவதற்கு பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கு உதவுதல்.

3.3.5 பல்கலைக்கழகங்கள், உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கு முன்பள்ளிப் பணியாளர்களுக்கு முன்பிள்ளைப் பருவக் கல்வி மற்றும் சிறுவர் விருத்தி தொடர்பாக நுழைவு-மட்ட மற்றும் உயர்மட்ட கற்றலுக்கு தகுதி அடிப்படையிலான புலமைப்பரிசில் மற்றும் தேவை அடிப்படையிலான உதவிகளை வழங்குவதற்கு உதவுதல்.

3.3.6 முன்மாதிரியான ஆரம்பக் கற்றல் வழிகாட்டிகள், ஆசிரியைகள் அவ்வாறே கற்பித்தல், கற்றல் மற்றும் புத்தாக செயற்பாடுகளில் சிறந்து விளங்கிய மத்தியநிலையங்களுக்கு விருது வழங்கும் திட்டத்தினை நிறுவுதல்.

3.3.7 முன்பள்ளிப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் முன்சேவை நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் செயன்முறையை உருவாக்குதல்.

3.3.8 முன்பள்ளிப் பணியாளர்களுக்கு பயிற்சி மற்றும் கற்றல் வாய்ப்புக்களை வழங்கும் ஆய்வுகூடமாக மாகாண முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி வள நிலையங்களை பலப்படுத்துதல்.

3.3.9 முன்பள்ளி விடயங்கள் தொடர்பாக நியமிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கு தூண்டல் மற்றும் திசைமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

3.3.10 போதனா பயிற்சி மற்றும் பிரயோக கற்றல் என்பவற்றின் அடிப்படையில் சேவைகால க்முன்பள்ளிப் பணியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் முதலீட்டினை ஊக்குவித்தல்.

## 3.4 பெற்றோர், குடும்பம் மற்றும் சமூதாயப் பங்கேற்றல்

### கொள்கை 4:

முன்பள்ளி வயதுகளில் பிள்ளைகளின் கற்றல் மற்றும் விருத்தியில் சகல குடும்பங்களும் சமூதாயங்களும் முன்னாரம்பக்கல்வியில் செயலூக்கமுள்ள பங்கேற்பவர்களாகவும் ஒத்துழைப்பவர்களாக இருப்பதோடு முன்னாரம்பக் கல்வி நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் குடும்ப நடைமுறைகளைப் பலப்படுத்த ஒன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்

### உபாயங்கள்

3.4.1 முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் முன்பள்ளிக் கல்வி தொடர்பாக பெற்றோர், குடும்ப பாதுகாவலர்கள் (உதா: பாட்டன் பாட்டி, மாமா, மாமி) மற்றும் சேவை வழங்குநர்களின் மனப்பாங்கு, விழுமியம் மற்றும் நடத்தைகளை ஒழுங்குமைக்கும் விதத்தில் தேசிய மற்றும் மாகாண விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவித்தலும் வசதிப்படுத்துதலும்.

4

கொள்கை கூற்று

5

கொள்கை கூற்று

3.4.2 பிள்ளைகளின் கற்றலையும் விருத்தியையும் முன்பள்ளி மற்றும் வீட்டு சூழலில் மேம்படுத்துவதற்காக குடும்பத்தினதும் சமுதாயத்தினதும் ஈடுபாட்டினை வலியுறுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களைத் தேசிய ரீதியிலும் மாகாண ரீதியிலும் நடத்தி அவற்றை பலப்படுத்துதல்.

3.4.3 முன்பள்ளி வகுப்பறையில் உட்படுத்தல் மற்றும் பன்முகத்தன்மையுடன் தொடர்புடைய போதனா நடவடிக்கைகளில் பெற்றோரின் ஈடுபாட்டினை ஊக்குவித்தல்.

3.4.4 பெற்றோர் மற்றும் ஆரம்பப் பராமரிப்பாளர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் இணைந்து முன்பள்ளி முகாமைத்துவம் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளவும் இலக்குகளை வரையறுக்கவுமென முன்பள்ளி அபிவிருத்தி குழுக்களை ஊக்குவித்தல்.

## 3.5 தரவுகள், ஆராய்ச்சி, மதிப்பீடு மற்றும் ஆவணப்படுத்தல்

### கொள்கை 5:

கொள்கை நடவடிக்கைகள் கொள்கையின் தரம் மற்றும் அதன் பிரயோகத்தின் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் தொடர்பாக கிடைக்கத்தக்க சிறந்த சான்றுகள் மற்றும் உதவியின் அடிப்படையிலேயே அமைந்திருக்க வேண்டும்.

### உபாயங்கள்

3.5.1 முன்-பள்ளிகளுக்கான கல்வி முகாமைத்துவ தகவல் முறைமையை (EMIS) விருத்திசெய்தல். இம்முறைமை மைய ரீதியாக தொகுக்கப்பட்டு மாகாண ரீதியில் முகாமை செய்யப்படும். இம்முறைமையின் பிரதான நோக்கம் முன்பள்ளிகளின் பதிவு, கண்காணிப்பு, பகுப்பாய்வு, திட்டமிடல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளலில் தரவுகளின் பயன்பாட்டினை ஊக்குவித்தலும், பல்வேறு மாகாணங்களில் நடவடிக்கைகள், குறிகாட்டிகள் மற்றும் தரவுகளை தொடர்புபடுத்துதல்.

3.5.2 முன்பிள்ளைப் பருவ விருத்தி நிலையங்கள் தொடர்பான தேசியத் தொகை மதிப்பினை நடத்துதல்.

3.5.3 இளம் பிள்ளைகளின் கற்றல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிக்கு உதவும் விதத்தில் ஆராய்ச்சி உதவித் தொகைகளையும் ஆராய்ச்சி, கொள்கை மற்றும் பிரயோகத்துக்கிடையில் தொடர்பினை பலப்படுத்துவதற்கான போதனா வழிகாட்டல்களையும் நிறுவுதல்.

3.5.4 கொள்கை, முன்பள்ளிக் கல்விச் சேவைகள் மற்றும் போதனா உட்கட்டமைப்பு என்பவற்றை புதுப்பிக்கவும் மேம்படுத்தவும் ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டினை நடத்துதலும் அவற்றை வெளியிடலும்.

3.5.5 இளம் பிள்ளைகளை ஈடுபடுத்தி மேற்கொள்கின்ற ஒழுக்கம்சார்ந்த ஆராய்ச்சிக்கான வழிகாட்டலை விருத்திசெய்தல், ஆராய்ச்சியின் போது ஆபத்து மற்றும் தீங்கு இயன்றளவு குறைக்கப்பட்டிருப்பதையும் இளம் பிள்ளைகளுக்கு போதிய பாதுகாப்பு வழங்கபட்டிருப்பதையும் உறுதிப்படுத்துவதற்கான இணக்கத்தை உறுதிசெய்தல்.

3.5.6 கற்பித்தல் மற்றும் கற்றலில் தொடர்ச்சியான முன்னேற்றம் தொடர்பாக கூட்டுக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேசிய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்சார் கற்றல் சமூகத்தை அமைத்தல்

## 3.6 முன்பள்ளிக் கல்வியின் ஆளுகையும் நிதியிடலும்

### கொள்கை 6:

இலங்கையில் முன்பள்ளிக் கல்வியானது வினைத்திறன் மற்றும் வகைகூறல் ஆளுகையுடன் கூடிய இசைவான, நன்கு சீரமைக்கப்பட்ட முறைமையினூடாகவும், மேலும் இளம் பிள்ளைகளினதும் அவர்களினுடைய கல்வியியலாளர்களின் தேவைகளை சமமாக நிறைவேற்றுவதற்கான தேசிய, மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வரவு செலவுத்திட்டங்களினூடாகவும் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

### உபாயங்கள்

3.6.1 இலங்கையிலுள்ள சிறுவர்கள் அனைவருக்கும் உயர் தரமான முன்பள்ளிக் கல்விக்கான வாய்ப்புகள் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு "முன்பள்ளி கல்வி சட்டம்"(த்தை) அறிமுகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.

3.6.2 முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் முன்பிள்ளை பருவக் கல்விக்கான தேசிய தலைமைத்துவ பணிப்பாணையுடன் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழ் நியதிச்சட்ட நிறுவனமாக செயற்படும் விதத்தில் சிறுவர் செயலகத்தினை முன்பிள்ளை பருவ அபிவிருத்தித் திணைக்களமாக மாற்றுதல்.

3.6.3 மாகாண ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளின் தொழிற்பாடுகள், பணியாளர் நியமனம், வளப்படுத்தல், மற்றும் சட்ட விதிமுறைகளில் ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல்.

3.6.4 அரசியலமைப்பு ரீதியாகப் பெறப்பட்ட தேசிய கொள்கை விருத்தியின் பிரயோகம், தேசிய நிறுவனங்களின் நியமங்களை தயாரிக்கும் பொறுப்பு, அவ்வாறே மாகாண சபைகளின் அனைத்து முன்பள்ளிகளின் முகாமைத்துவத்தை மேற்பார்வையிடும் பொறுப்பு என்பவற்றை பலப்படுத்துதலும் நெறிப்படுத்தலும்.

3.6.5 முன்பள்ளிக் கல்விக்கான தரஉறுதிப்பாட்டுச் செயன்முறைகளை மேற்பார்வை செய்வதற்கான தேசிய மற்றும் மாகாணப் பொறிமுறைகளை அமைத்தல்.

3.6.6 முன்பிள்ளைப் பருவ விருத்திக்கான தேசிய மற்றும் மாகாண நிறுவனங்களில் பணியாற்றும் ஆளணியின் தொழில்சார் விருத்திக்கு அதிகளவில் முதலீடுகளை மேற்கொண்டு நிறுவன ரீதியான, தனிப்பட்ட ரீதியான ஆற்றலைப் பலப்படுத்துதல்.

3.6.7 நிகழ்ச்சித்திட்டங்களை அளவிடுவதற்கும் வினைத்திறன் மற்றும் இயைபடுத்தலை உறுதிப்படுத்துவதற்கும் தேசிய மற்றும் மாகாண மட்டங்களுக்கிடையிலும் மாகாணங்களுக்கு மத்தியிலும் பல்துறைவாரியான கொள்கை திட்டமிடலை ஊக்குவித்தல். அவ்வாறே, நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்து நிதியிடற் செயற்பாடுகள் முழுவதிலும் இசைவாக்கத்தை உறுதிப்படுத்துதல்.

3.6.8 ஐக்கிய நாடுகள் முறைமையின் நிறுவனங்கள், பல்துறைசார் அபிவிருத்தி வங்கிகள், தனியார் தொழிற்துறை, சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற அமைப்புக்கள், அறிஞர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களிலிருந்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலும் அவற்றுடன் கூட்டுறவினை மேம்படுத்தலும்.

3.6.9 அரசாங்கத்தின் மேற்பார்வை மற்றும் விதிமுறைகளுக்கு உட்பட்டு பொதுப் பண்டம் மற்றும் ஒத்துழைப்பு என்ற வகையில் கல்வியின் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்ளலும் தனியார் சேவை வழங்குநர்களின் வகிபாகத்தை ஊக்குவித்தலும்.

3.6.10 முன்பிள்ளைப் பருவக் கல்விக்கான உள்நாட்டு நிதியிடலை முன்னுரிமைப்படுத்தலும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தலும்.

3.6.11 மாகாண ஒழுங்குபடுத்தும் அதிகார சபைகள், பணிமனைகள் அல்லது அலகுகளால் நிதியிடுகின்ற முன்பிள்ளைப் பருவ விருத்தி். முன்பிள்ளை பருவ கல்விக்கு பகிர்ந்தளிக்கவும் அவற்றின் பயன்பாட்டுக்காகவும் முற்போக்கான உலகளாவியவாதம் “rogressive Universalism” (அதாவது, அனைத்து பிள்ளைகளையும் பாடசாலைக்கும் கற்றலுக்கும் இணைத்துக்கொள்ளல்) என்ற எண்ணக்கருவின் அடிப்படைகளை இணைத்துக்கொள்ளல்.

3.6.12 தரத்தை மேம்படுத்தவும் சமத்துவத்தை உத்தரவாதப்படுத்தவும் நிதியிடல் முறைமையில் கவனம் செலுத்துதல்.

3.6.13 கல்வி, சுகாதாரம், போசாக்கு, சிறுவர் பாதுகாப்பு, நீர் மற்றும் சுத்தம், சமூக பாதுகாப்பு ஆகிய அனைத்து துறைகளிலும் முதலீடுகளை மேற்கொள்ளல்.

3.6.14 முன்பள்ளிக் கல்வியில் தனியார் நிதியிடுதலின் வகிபாகத்தை வசதிப்படுத்தல்

# 4. கொள்கை அமுல்படுத்தல் சட்டகம்



சிறுவர் விவகாரங்கள் அமைச்சு முன்பள்ளிக் கல்வி தொடர்பான தேசிய கொள்கையின் அமுலாக்கத்தை நிருவகிக்கும். அமைச்சுக்குத் தேவையான அதிகாரமும் போதிய வளங்களும் வழங்கப்படும்.

தேசிய கொள்கையானது முன்பிள்ளைப் பருவ பாராமரிப்பு மற்றும் விருத்தி தொடர்பான தேசிய கொள்கைக்கான பங்களிப்பு கருப்பொருள் கொள்கையாக கருதப்படும். தேசிய மட்டத்தில் முன்பிள்ளைப் பருவ பாராமரிப்பு மற்றும் விருத்தி (ECCD) தொடர்பான தேசிய ஒருங்கிணைப்புக் குழு (NCC) இக்கொள்கையின் அமுலாக்கத்தை மேற்பார்வை செய்யும்.

அதற்கேற்ப தேசிய ஒருங்கிணைப்புக் குழு தேசிய கொள்கையை அதன் தூய வடிவில் அமுல்படுத்துவது தொடர்பாக சிறுவர் விவகாரங்கள் அமைச்சுக்குத் தேவையான ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக ஆரம்ப கற்றல் ஆலோசனை குழுவினை (ELAC) அமைக்கும்.

ஆரம்பக் கற்றல் ஆலோசனைக் குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு:

- ★ சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் (தலைவர்)
- ★ சிறுவர் செயலகத்தின் பணிப்பாளர் (செயலாளர்)
- ★ தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர், அல்லது தலைவரால் நியமிக்கப்படும் நிறைவேற்றுத்தரத்திலுள்ள பிரதிநிதி
- ★ நிதி ஆணைக்குழுவின் தலைவர், அல்லது அல்லது தலைவரால் நியமிக்கப்படும் நிறைவேற்றுத்தரத்திலுள்ள பிரதிநிதி
- ★ கீழ் குறிப்பிடுகின்ற அமைச்சுக்களின் செயலாளர்களால் நியமிக்கப்படுகின்ற நிறைவேற்றுத்தரத்திலுள்ள பிரதிநிதிகள்
    - கல்வி
    - நிதி
    - சுகாதாரம்
    - சமூக சேவைகள், மற்றும்
    - மாகாண சபைகள்

- மாகாண ஒழுங்குபடுத்தல் அதிகார சபைகளின் பணிப்பாளர்கள் அல்லது மாகாணங்களுக்கான பிரதம செயலாளர்களால் நியமிக்கப்படுகின்ற நிறைவேற்றுத்தரத்திலுள்ள பிரதிநிதிகள்.

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் நிறைவேற்றுதரத்திலுள்ள பிரதிநிதிகள்

- பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்படுகின்ற நிறைவேற்றுத்தரத்திலுள்ள பிரதிநிதிகள்

சிறுவர் செயலகம் ஆரம்பக் கற்றல் ஆலோசனை குழுவின் செயலகமாகத் தொழிற்படும். ஆரம்பக் கற்றல் ஆலோசனை குழு துறைசார் நிபுணர்களின் சேவைகளையும் தொழிநுட்ப நிபுணத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளும், அல்லது தேசிய கொள்கையினை வலுப்படுத்துவதற்கு ஒரு செயற்குழுவை உருவாக்கிகொள்ளும்.

ஆரம்பக் கற்றல் ஆலோசனைக் குழுவின் பூரண பணிப்பாணையானது தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குறியீட்டு நியதிகளினூடாக உருவாக்கப்படும்.

தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கு ஆரம்பக் கற்றல் ஆலோசணை குழு துறைசார் திட்டத்தினை விருத்தி செய்யும். குறித்த துறைசார் திட்டமானது இத்தேசிய கொள்கையில் பட்டியலிடப்பட்டுள்ள உபாயங்களை அமுல்படுத்துகின்ற, அவற்றுக்கு பங்களிப்பு செய்கின்ற முகவர் நிலையங்கள், அவற்றை அமுல்படுத்துவதற்கான காலவரையறை, ஒரு முதலீட்டுத் திட்டம், எதிர்பார்ப்பு பெறுபேறுகள் மற்றும் முன்னேற்றம், இலக்குகளின் முக்கிய சுட்டிகள் என்பவற்றை இனங்காணும். இத்துறைசார் திட்டம் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதில் இற்றைப்படுத்தல்களை மேற்கொள்ளும்.

மாகாண அதிகாரசபைகளின் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றும் விடயத்தில் அவதானிக்கத்தக்க வேறுபாடுகள் இருப்பதனால் அனைத்து மாகாணங்களுக்கும் பொதுவான இசைவான நியமங்கள் மற்றும் ஒழுங்குமுறை ஏற்பாடுகளை அமைத்துகொள்ளுமாறும் அவ்வாறே தொலைநோக்கு மற்றும் பொதுவான தேசிய துறைசார் திட்டத்தில் வழிகாட்டப்பட்ட விடயங்களை கண்காணிப்பதற்கான ஒரு முறையை தயார்செய்துகொள்ளுமாறும் இக்கொள்கையில் பரிந்துரைக்கப்படுகின்றது.

முன்பள்ளிக் கல்வி மேற்பார்வை மற்றும் முகாமை தொடர்பாக மாகாண ரீதியில் விருத்திசெய்யப்பட்ட புதிய தொழிநுட்பங்களையும் மற்றும் அணுகுமுறைகளையும் அளவிடுவதற்கும் அவற்றை புதுப்பிப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் தேவையான சக்தி மாகாண அதிகாரசபைகளுக்கு உள்ளதென இக்கொள்கை ஏற்று அதனை ஊக்குவிக்கின்றது.

மாகாண அதிகாரசபைகள், பணிமனைகள் அல்லது அலகுகள் தேசிய கொள்கையை அமுல்படுத்தும் போது கருத்திற்கொள்ள வேண்டிய விடயங்களாவன:

- துறைசார் திட்டத்துடன் இணைத்து கால வரையறையுடன் கூடிய மாகாண அமுலாக்கல் திட்டங்களை விருத்திசெய்தல்.

- மாகாண அமுலாக்கல் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு தேவையான ஆலோசனைச் சேவைகள் மற்றும் வழிகாட்டலை வழங்குவதற்கு மாகாண மட்டத்தில் துறைசார் குழுக்களை அமைத்துக்கொள்ளல்.

- மாகாண அமுலாக்கல் திட்டத்தினை அமுல்படுத்துவதற்கு வழிகாட்டுவதற்காக மாகாண மட்டத்தில் தாபிக்கப்பட்ட எதாவது ஒருங்கிணைப்புக் குழுவில் சிறுவர் விவகாரங்கள் அமைச்சின் பிரதிநிதிகளை உள்ளடக்குதல்.

- மாகாண அமுலாக்கல் திட்டத்தினை தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அவற்றின் நிலைமைகள் தொடர்பாக ஆரம்ப கற்றல் ஆலோசனை குழுவினூடாக தேசிய இணைப்பு குழுவுக்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல்.

# பின்னிணைப்பு

## பின்னிணைப்பு 1: பதங்கள் மற்றும் வரைவிலக்கணங்களின் அருஞ்சொற்பட்டியல்

### பிள்ளை

பிள்ளை மற்றும் இளவயது ஆட்கள் கட்டளைச்சட்டமானது இலங்கையில் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஒருவரைப் பிள்ளை என வரைவிலக்கணப்படுத்துகின்றது.

### பிள்ளை மையம்[9]

பிள்ளை மைய அணுகுமுறைகள் கல்வி மற்றும் பராமிப்பு சேவைகளிலுள்ள கல்வி ரீதியான நிகழ்ச்சித்திட்டத்தின் விருத்திக்கான அத்திவாரமாக பிள்ளையின் சமகால அறிவு, பலங்கள், எண்ணங்கள், கலாசாரம், ஆற்றல்கள் மற்றும் ஆர்வம் என்பவற்றை கருத்திற்கொள்கின்றன.

### விருத்திசாாந்த பொருத்தமான நடைமுறை[10]

விருத்திசார்ந்த பொருத்தமான நடைமுறை (DAP) என்பது ஒவ்வொரு பிள்ளையினதும் அனுகூலமான விருத்தியையும் கற்றலினையும் ஊக்குவிப்பதற்கென ஆரம்பபிள்ளை பருவ கல்வியியலாளர்கள் மற்றும் ஏனைய வாண்மையாளர்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் ஆகும். இத்தகைய தீர்மானங்கள் விரிவான ஐந்து பகுதிகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. 1) அரவணைப்பும் சமத்துவமுமிக்க கற்கும் சமூகத்தை உருவாக்குதல். 2) குடும்பங்கள் சமுதாயங்களுடன் இணைந்து கௌரவமான பரஸ்பர பங்குதாராக உருவாக்குதல் 3) பிள்ளைகளின் விருத்தியையும் கற்றலையும் அவதானித்தல், ஆவணப்படுத்துதல், மதிப்பிடுதல். 4) ஒவ்வொரு பிள்ளையின் விருத்தியையும் கற்றலையும் உறுதிப்படுத்தும் கற்பித்தல், 5) அர்த்தமுள்ள வகையில் இலக்குகளை அடைவதற்கான கலைத்திட்டத்தை திட்டமிடுதலும் அமுல்படுத்துதலும்.

### சூழலைச் சாத்தியமாக்குதல்[11]

ஆரம்ப வயதுகளில் சூழலைச் சாத்தியமாக்குதல் என்பது சகல பிள்ளைகளினதும் கலாசாரம் மற்றும் சமுதாயங்களுக்குப் பொருத்தமான தூண்டுதலளிக்கும் வளங்களை வழங்குதல், விளையாட்டு மற்றும் விளையாட்டு ரீதியான கற்பித்தல் மூலம் கற்றல் சந்தாப்பங்கள், ஆபத்ததை எதிர்கொள்வதற்கும் தேடி அறிவதற்குமான உதவிகள் ஆகியவற்றறை வழங்குதல்.

---

9 *Australian Children's Education and Care Quality Authority, Guide to the National Quality Framework (Sydney, 2018).*

10 *National Association for the Education of Young Children, "NAEYC Position Statement on Developmentally Appropriate Practice: 2019", Washington, D.C., 2019.*

11 *Early Education, Development Matters in the Early Years Foundation Stage (EYFS) (London, 2012).*

## நியாயமான வாய்ப்பு

நியாயமான வாய்ப்பு என்பது இலங்கையில் முனபள்ளி வயதிள்ள ஒவ்வொரு பிள்ளையினதும் நிலைமையைக் கருத்திற் கொள்ளாது முன்பள்ளிக் கல்வியை பெற்றுக் கொள்ளும் ஆற்றல்.

## உயர்தரமான முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டங்கள்

உயர்தரமான முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டம் இளம் பிள்ளையின் உடல், சமூக, மனவெழுச்சி மற்றும அறிவாற்றவல் விருத்தியினை ஊக்குவிப்பதோடு பாதுகாப்பான சூழலை வழங்குகின்றது. இத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களில் உள்ளார்ந்த தொடர்புகள், நடவடிக்கைகள், சாதனங்கள், கற்றல் வாய்ப்புக்கள், சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவற்றின் செயன்முறை, ஒவ்வொரு சிறுவர் குழுக்களின் பருமன், வளாந்தோர் பிள்ளை விகிதம், ஆசிரியர்கள் மற்றும் ஆளணியின் கல்வியும் பயிற்சியும் என்ற அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன.

## முழுமையான விருத்தி[12]

பிள்ளையின் அபிவிருத்திக்கான முழுமையான அணுகுமுறையில் பிள்ளைகளின் உடல், தனியாள், சமூக, மனவெழுச்சி, ஆன்மீக ரீதியான நலன்கள் மற்றும் கற்றலின் அறிகைசார் அம்சங்களும் கருத்திற்கொள்ளப்படுகின்றன.

## மிகவும் பாதிப்புக்குள்ளாகும் மற்றும் பின்தங்கிய பிள்ளைகள்

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் குழுவின் பொது வியாக்கியனம் இல. 7 (2005) இன் படி:

முன்பிள்ளைப் பருவத்தில் சிறுவர் உரிமைகளை அமுல்படுத்தல் என்னும் எண்ணக்கருவில், மிகவும் பாதிப்புக்குள்ளாகும் பிள்ளைகளில் பின்வருவோா் உள்ளடங்குவா்: வறுமையில் வாழ்கின்ற பிள்ளைகள், பெண்பிள்ளைகள், பழங்குடிகள் அல்லது சிறுபான்மை குழுக்களில் உள்ள பிள்ளைகள், புலம்பெயர்ந்த குடும்பங்களின் பிள்ளைகள், அநாதைப் பிள்ளைகள் அல்லது வேறு காரணங்களுக்காக பெற்றோரின் பராமரிப்புக் கிடைக்காத பிள்ளைகள், நிறுவனங்களில் வசிக்கின்ற பிள்ளைகள், சிறைச்சாலைகளில் தாய்மாருடன் வசிக்கும் பிள்ளைகள், அகதி மற்றும் புகலிடம் கோரும் பிள்ளைகள், எச்.ஐ.வீ எய்ட்ஸ் தொற்றுக்குள்ளான அல்லது அதனால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள், மதுபானம் மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையான பெற்றோரின் பிள்ளைகள்.

“பின்தங்கிய பிள்ளைகளின்” குடும்ப, சமூகம் அல்லது பொருளாதாரச் சூழ்நிலைகள் முன்பள்ளியில் கற்பதற்கான அவர்களின் இயலுமையைத் தடுக்கின்றன.

## முன்பள்ளி வயதிலுள்ள பிள்ளைகள்

இலங்கையில் மூன்றுக்கும் ஐந்துக்கு இடைப்பட்ட வயதுடைய பிள்ளைகள் முன்பள்ளி வயதுப் பிள்ளைகளாக கருதப்படுகின்றனர்.

12 *Commonwealth of Australia, Department of Education and Training, Belonging, Being & Becoming: The Early Years Learning Framework for Australia (2009).*

## முன்பள்ளிக் கல்வி அல்லது ஆரம்பப்பிள்ளைப் பருவக் கல்வி[13]

முன்பள்ளிக் கல்வி அல்லது ஆரம்பப் பிள்ளை பருவ கல்வியானது முழுமையான அணுகுமுறையுடன் பிள்ளைகளின் அறிகை, உடல், சமூக மற்றும் மனவெழுச்சிக்கு உதவும் கற்றலையும் கற்றல் மற்றும் செயற்பாடுகளையும் வழங்குவதுடன் குடும்பத்திற்கு வெளியே கல்வி சார் ஆயத்த நிலைக்கு தேவையான சில திறன்களை விருத்திசெய்வதற்கென ஒழுங்குபடுத்தப்பட்ட போதனையை அறிமுகம் செய்வதுடன் ஆரம்பக் கல்வியில் சேர்ந்து கொள்வதற்கும் ஆயத்தம் செய்கின்றது.

## முன்பள்ளிப் பணியாளர்கள்

முன்பள்ளிப் பணியாளர்களுள் உள்ளடங்குவோர் முன்பள்ளி ஆசிரியர்கள், முன்பிள்ளைப் பருவ விருத்தி/ ஆசிரிய உதவியாளர்கள், முன்பள்ளிக் கல்விக்கான தேசிய மற்றும் மாகாண அதிகாரசபைகள்/ பணிமனைகள்/ அலகுகளின் அரச உத்தியோகத்தர்கள், தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களில் சிறுவர் விடயங்கள் தொடர்பாகச் செயற்படும் முகவர் நிலையங்களின் அரச உத்தியோக்கத்தர்கள் போன்றோர்

## முற்போக்கான உலகலாவிய வாதம்[14]

முற்போக்கான உலகளாவியவாதம் என்பது ஏழைகள் மற்றும் பின்தங்கியவர்களின் தேவைகளை முன்னுரிமைப்படுத்தியவாறே ஒவ்வொருவருக்கும் தரமான கல்வியை வழங்கலை விரிவுபடுத்துவதாகும். அது அரச நிதியின் பற்றாக்குறையை ஏற்றுக்கொண்டு செலவிடல் தீர்மானங்களைத் தெரிவிக்கும் வழிகாட்டல்கள் கோட்பாடுகளை முன்வைக்கின்றது.

## பின்னிணைப்பு 2. தேசிய முன்பள்ளிக் கல்விக்கொள்கை வரைவாளர் குழு

தேசிய கொள்கை ஆவணமானது தேசிய கல்வி ஆணைக்குழுவினால் (NEC) ஆறு அங்கத்தவர்களை கொண்ட குழுவின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது. அவர்களுடைய பெயர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| கலாநிதி ஜீ. பீ. குணவர்தன | உப தலைவர்(கொள்கை), தேசிய கல்வி ஆணைக்குழு |
| பேரா எல். சி. கொத்தலாவல | ஓய்வுபெற்ற பேராசிரியர், முன்பிள்ளைப் பருவம் மற்றும் ஆரம்பகல்வித் திணைக்களம், கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| கலாநிதி இந்திராணி தலகல | முன்னாள் தலைவர், முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித் திணைக்களம், கல்விப் பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம் |
| திருமதி நயனா சேனாரத்ன | சிறுவர் செயலகம், மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு |
| திரு. ரஸிக சோமவீர | கல்வி அதிகாரி, யுனிசெப், இலங்கை |
| திருமதி அச்சலா தமயந்தி | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்(கொள்கை ஆராய்ச்சி), தேசிய கல்வி ஆணைக்குழு |

13 *UNESCO Institute for Statistics, Glossary. Available at http://uis.unesco.org/en/glossary (accessed on 10 July 2019).*

14 *The International Commission on Financing Global Education Opportunity, The Learning Generation: Investing in Education for a Changing World (2016).*

# கொள்கை தயாரிப்புக்குழு நிபுணத்துவ ஆலோசனை

தேசிய கல்வி ஆணைக்குழுவானது தேசிய கொள்கையினை நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், முன்பிள்ளைப் பருவ விருத்தி தொழில் நடத்துநர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், நிர்வாகிகள், ஐக்கிய நாடுகளின் முகவர்கள் மற்றும் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட துறைவாரியான இலக்குக்குழு மற்றும் தேசிய நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் ஆவணங்களிலிருந்து தொகுக்கப்பட்ட கருத்துக்களையும் பரிந்துரைகளையும் அடிப்படையாக கொண்டு தயாரித்துள்ளது.

தேசிய கொள்கையை தயாரிக்கும்போது இக் குழுவானது சந்தித்து இடைத்தாக்கம் செய்த நிறுவனங்கள், அமைப்புக்கள் , செயற்பாட்டளர்கள் பெயர் பட்டியல் பின்வருமாறு

- கல்வி அமைச்சு
- மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு
- சிறுவர் செயலகம்
- தேசிய திட்டமிடல் திணைக்களம்
- முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித் திணைக்களம்,
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- தேசிய கல்வி நிறுவகம்
- ப்ளான் இன்டர்நஸ்னல் சிறீலங்கா (Plan International Sri Lanka)
- பெருந்தோட்ட மனித விருத்தி நம்பிக்கை நிதியம்
- மாகாண ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைகள்
- பாடசாலைகள், முன்பள்ளிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சி நிலையங்களின் பிரதிநிதிகள்
- சர்வோதய சிரமதான இயக்கம்
- சேவ் த சில்ரன் (Save the Children)
- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
- யுனிசெப்
- வேர்லட் விசன் லங்கா (World vision Lanka)

## பின்னிணைப்பு 3. தேசிய கல்வி ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள்

ஓய்வுபெற்ற பேராசிரியர் டபிள்யு. ஐ. சிறிவீர - தலைவர்
கலாநிதி ஜீ. பீ. குணவர்தன உப தலைவர் (கொள்கை)
கலாநிதி டீ. ஏ. பியசிறி உப தலைவர் (திட்டமிடல்)
வண. கலாநிதி அகுரடிய நந்த நாயக்கதேரர்
பேராசிரியர் மொஹான் தீ சில்வா
பேராசிரியர் தயந்த விஜேசேகர
பேராசிரியர் ஆர். யு. ஹல்வதுர
பேராசிரியர் கே. கந்தசாமி
பேராசிரியர் எம். ஏ. நுஹுமான்
பேராசிரியர் டீ. ஏ. தந்திரிகொட
கலாநிதி எஸ். பீ. ஏக்கநாயக
கலாநிதி மல்லிகா கருணாரத்ன
திரு. ஏ. என் ஹபுகல
திருமதி நயனா நந்தவிதாரன
திருமதி வீ. பீ. பீ. கே. வீரசிங்ஹ
திருமதி எச். ஜீ. அப்சரா கல்தேர
ஆணைக்குழுவின் செயலாளர்

## பின்னிணைப்பு 4. தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொதுக் கல்வி தொடர்பான நிலையியற் குழு அங்கத்தவர்கள்

கலாநிதி ஜீ. பீ. குணவர்தன (தலைவர்)
ஓய்வுபெற்ற பேராசிரியர் டபிள்யு. ஐ. சிறிவீர
கலாநிதி டீ. ஏ. பியசிறி
வண. கலாநிதி அகுரடிய நந்த நாயக்க தேரர்
வண. பேராசிரியர் நாபிரிதன்கடவர ஞானரத்னதேரர்
பேராசிரியர் சந்திரசேகரம்
பேராசிரியர் ஹுசைன் இஸ்மாயில்
பேராசிரியர் நாரத வர்ணசூரிய
பேராசிரியர் டீ. ஏ. தந்திரிகொட
பேராசிரியர் ஆர். யு. ஹல்வதுர
பேராசிரியர்(திருமதி) மல்லிகா கருணாரத்ன
கலாநிதி(திருமதி) ஹிரந்தி விஜேமான்ன
வைத்தியர் தியந்த சமரசிங்ஹ
கலாநிதி எஸ். பீ. ஏக்கநாயக
கலாநிதி ஜயந்த குணசேகர
கலாநிதி திருமதி மதுரா வேகல
வைத்தியர் அஜித் அமரசிங்ஹ
கலாநிதி உபாலி மாம்பிடிய
திரு. பிரிதிவிராஜ் பெரேரா
திரு. சிசிர மல்லவ ஆராச்சி
திரு எஸ். குருப்பு ஆராச்சி
வண. துசந்த றொட்ரிகோ
திருமதி காயத்ரி அபேகுணசேகர
திருமதி டபிள்யு. டீ. எல். சௌபாக்யா
திருமதி எஸ். ஆர். தென்னகோன்

தேசிய கல்வி ஆணைக்குழு
126, நாவல வீதி நுகேகொட, இலங்கை
**www.nec.gov.lk**